# பொய்யான பக்தி

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# பொய்யான பக்தி

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கூண்டோடு வைகுந்தம் | 5 |
| 2. | பக்திக்கு அடிப்படை நல்லொழுக்கம் | 16 |
| 3. | பாகற்காய் கசந்த கதை | 22 |
| 4. | பாவங்களைக் கழுவுவது எப்படி | 26 |
| 5. | பொய்யான பக்தி | 29 |
| | 5.1 புரோகிதர் தோதையா | 40 |
| | 5.2 மது அருந்திய பெண்களின் கதை | 43 |
| 6. | தவ வேடம் | 47 |
| | 6.1 கபட சந்நியாசியின் கதை | 50 |
| | 6.2 முயலையையும் ஆந்தையையும் பூனை வஞ்சித்த கதை | 54 |
| 7. | தவறான போதனை | |
| | 7.1 தவறான போதனையை நம்பிக் கெட்ட சுந்தரியின் கதை | 62 |

# பொய்யான பக்தி

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 1. கூண்டோடு வைகுந்தம்.

(இது விக்கிரமாதித்தன் கதைகளில் ஒன்று.)

விஜயன் என்ற தச்சன், பல அற்புத மரச்சாமான்களும் அழகான பதுமைகளும் செய்து கொடுத்து, விக்கிரமாதித்த மன்னனுக்கு அந்தரங்க நண்பன் ஆனான். விக்கிரமாதித்த மன்னனுக்குக் கூடு விட்டுக் கூடு பாயும்வித்தை தெரியும். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையை விக்கிரமாதித்தன்தன் அந்தரங்க நண்பனாகிய விஜயனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தான். விக்கிரமாதித்த மன்னனிடமிருந்து கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையைக் கற்றுக்கொண்ட விஜயனோ, அரசனின் உடலுக்குள் புகுந்து, அரச போகத்தை அனுபவிக்க ஆசைப்பட்டு, சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் விக்கிரமாதித்த மன்னன், தன் அந்தரங்க நண்பனாகிய விஜயனுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். இருவரும் வேட்டையாடிக் களைத்த பின் ஒரு தடாகத்தின் அருகில் வந்து , நீர் அருந்திவிட்டு, அங்கிருந்த ஓர் ஆலமரத்தின் நிழலில் படுத்து ஓய்வெடுத்தனர்.

அப்போது அம்மரத்தின் கிளைகளில் விளையாடிக்கொண்டிருந்த ஜோடிக் கிளிகளில் ஆண் கிளி திடீரென மாரடைப்பினால் இறந்து கீழே விழுந்தது. பெண் கிளி இறந்த ஆண் கிளியைச் சுற்றிச் சுற்றி வந்து பரிதாபமாகக் கிரீச்சிட்டு அழுதது, இந்தச் சோகக் காட்சியைக் கண்ட விக்கிரமாதித்தன் மனமிளகி, பெண் கிளிக்காக இரக்கப்பட்டு அதனுடைய சோகத்தைப் போக்க விரும்பினான். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையின் மூலம் தன்னுடைய உயிரைத் தன்னுடைய உடற்கூட்டை விட்டு எடுத்து அந்த ஆண் கிளியின் உடற்கூட்டில் புகுத்தினான். பின்னர் ஆண்

கிளியாகிவிட்டட விக்கிரமாதித்தன் பெண் கிளியுடன் கொஞ்சி மகிழ்ந்தான்.

அந்தச் சமயம் தச்சன் விஜயனோ, சட்டென்று கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையின் மூலம் தன் உடலைவிட்டு உயிரை விக்கிரமாதித்தனின் உடலில் புகுத்திக் கொண்டான். தன் உடலை அங்கே விட்டுச் சென்றால், விக்கிரமாதித்தனின் உயிர் திரும்பி வந்து அந்த உடலுக்குள் புகுந்து மீண்டும் மனித உருவை அடைந்துவிடுமோ என்ற பயம் உண்டாயிற்று. அதனால் விரைந்து தீயை மூட்டி அதில் தன் சொந்த உடலைப் போட்டு எரித்துவிட்டான். அதன் பின் போலி விக்கிரமாதித்தன் ஆகிவிட்ட தச்சன் விஜயன், தானே அரசனாக நகரத்திற்குச் சென்றான்.

கிளியாகிவிட்ட விக்கிரமாதித்தன் தன்னை மறந்தவனாய், பெண் கிளியுடன் சுற்றித் திரிந்து, அக்காட்டில் வாழ்ந்த தொண்ணூற்றொன்பது கிளிகளையும் ஒன்று படுத்தி அவற்றுக்குத் தலைவனாக இருந்து வந்தான். நூறு கிளிகளும் ஒன்றாகப் பறந்து திரிந்து ஒரே மரத்தில் கூடியிருப்பதைக் கண்ட ஒரு வேடன், கண்ணி வைத்தால் நூறு கிளிகளையும் ஒன்றாகப் பிடித்து விற்றுக் கொள்ளை இலாபம் பெறலாம் என எண்ணி வலையை விரித்து வைத்துவிட்டு மறைவாயிருந்தான். அதை அறியாத கிளிகள் நூறும் ஒன்றாகப் பறந்து வந்து, அக்கண்ணியில் விழுந்து வலையில் சிக்கிக்கொண்டு பரிதவித்தன.

அப்போது விக்கிரமாதித்தக் கிளி மற்றக் கிளிகளை நோக்கி, "அன்பார்ந்த தோழர்களே! ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை உணருங்கள்! பகுத்தறிவை உபயோகித்தால் இப்போது நாம் இந்த வலையை விட்டு ஒன்றாகவே விடுதலை பெற முடியும்! வேடன் வரும்போது நாம் அனைவரும் இறந்தது போலத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கிடக்க வேண்டும். வேடனோ கிளிகள் இறந்துவிட்டன என்று ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே போடுவான். முதலில் விழும் கிளி ஒன்று இரண்டு என்று எண்ணி வர வேண்டும். எண்ணிக்கை நூறு வந்ததும், எல்லாக் கிளிகளும் சத்தமிட்டுச் சரேலெனக் கிளம்பி ஒருமிக்கப் பறந்து தப்பிச் சென்றுவிடலாம்!" என்றான்.

விக்கிரமாதித்தக் கிளி சொன்னபடியே கிளிகளனைத்தும் வலையில் இறந்தது போலக் கிடக்க, அவற்றைப் பிடிக்க வந்த வேடன், கிளிகள் இறந்து விட்டனவே என வருந்தி, வலையை விட்டுக் கிளிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே போட்டான். முதலில் விழுந்த கிளி முறைதவறாமல் எண்ணிக் கொண்டே வந்தது. தொண்ணூற்றொன்பது கிளிகளையும் எடுத்துக் கீழே எறிந்த வேடன், கடைசிக் கிளியான விக்கிரமாதித்தக் கிளியைக் கையில் எடுத்தான். அப்போது அவன் இடுப்பிலிருந்த அரிவாள் தற்செயலாகக் கீழே விழுந்துவிட்டது. முறையாக எண்ணி வந்தக் கிளி அரிவாளையும் சேர்த்து நூறு என்று எண்ணிச் சப்தமிட்டுப் பறக்க, எல்லாக் கிளிகளும் குபீரெனப் பறந்து சென்றுவிட்டன. வேடன், கிளிகள் செய்த தந்திரத்தை உணர்ந்து ஆத்திரமடைந்தான். தன் கைப்பிடியில் அகப்பட்டுக் கொண்ட விக்கிரமாதித்தக் கிளியின் கழுத்தை ஆத்திரத்துடன் திருக முயன்றான்.

அப்போது விக்கிரமாதித்தக் கிளி, "வேடனே, என்னை வீணாகக் கொல்லாதே! நான் அபூர்வமான இராஜாக் கிளி. என்னை ஒரு கூண்டிலிட்டு அருகிலுள்ள நகருக்கு எடுத்துச் சென்று, வர்த்தகர்களிடம் பேசுங்கிளிக்கு நூறு பொற்காசுகள் விலையென்று கூறு. அவர்களும் கொடுப்பார்கள். நான் சொன்னபடி நடக்கவில்லையானால் அப்புறம் என் தலையைத் திருகிச் சாப்பிடலாம் என்றது. கிளி பேசுவதைக் கேட்டு வியப்புற்ற வேடன், கிளி சொன்னபடியே அதை அடுத்துள்ள நகருக்கு எடுத்துச் சென்று விலை கூறினான். ஒரு கிளிக்கு நூறு பொற்காசுகளா? என்று எல்லோரும் அதிசயித்தனர்.

அந்நகரின் கடை வரிசையில் வணிகர் தலைவரான மாணிக்கம் செட்டியார் தம் குமாரன் சோமசுந்தரத்திற்கு இருபது வயது நிரம்பியதால், தனியாக ஒரு கடை வைத்துக் கொடுத்தார். அப்போது அவ்வூர் வணிகர்கள் அனைவரும் அந்தக் கடையில் கூடியிருந்தனர். அதற்காகச் சோமசுந்தரம் தம் வீட்டிலிருந்து வரும் வழியில், கிளியுடன் நிற்கும் வேடனைக் கண்டார்.

"கிளி விற்பதற்கா, விலை என்ன?” என்று கேட்க, வேடன் நூறு பொன் என்று விலை கூறினான். அதைக் கேட்டு அதிசயித்த சோமசுந்தரம், சாதாரண கிளியின் விலை ஒரு காசு. அதிகம் போனால் இரண்டு காசு கொடுக்கலாம். நூறு காசு என்பது சுத்த ஏமாற்று வேலை" என்றான்.

அப்போது கிளி உருவிலிருந்த விக்கிரமாதித்தன், "செட்டியாரே! என்னை நூறு பொன் விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போய் உமது கடையில் வையுங்கள். உமது வியாபாரம் முழுவதையும் நான் கவனித்துக் கொள்கிறேன். ஒரு மாதத்தில் உமக்குப் பன்மடங்கு பொன்னும், பன்மடங்கு இலாபமும் சம்பாதித்துத் தருகிறேன்," என்றது.

கிளி பேசுவதைக் கேட்டு வியந்த சோமசுந்தரம், நூறு பொன் கொடுத்து அக்கிளியை வாங்கிக் கொண்டு கடைக்குச் சென்று, அதை ஒரு கூட்டிலடைத்துத் தொங்கவிட்டான். கடைக்கு வருவோரையும், போவோரையும் வரவேற்றுப் பொருள்களின் விலை கூறி, வியாபாரம் செய்தது கிளி. கிளி வியாபாரம் செய்வதைக் கண்டு, மக்கள் திரண்டு வந்து அதிசயித்து, பொருள்களின் விலையை அது ஒன்றுக்கு இரண்டாகச் சொன்னாலும், விலை கொடுத்து வாங்கிச் சென்றார்கள். இத்துடன் நில்லாமல் ஊரிலுள்ள வம்பு வழக்குகளை எல்லாம் விசாரித்து இரு தரப்பினரும் நியாயமெனக் கூறும்படி தீர்ப்பளித்து, நீதி வாக்கியக் கிளி என்னும் பெயரையும் பெற்று விளங்கியது.

அந்நாளில் அந்நகரத்தில், அதியற்புத அழகும், கலாவித்தைகளும் பெற்ற ரூபசௌந்தரி என்ற நாட்டியக்காரி ஒருத்தி இருந்தாள். அவளை அடைய ஆசைப்பட்டு வருவோரிடம் நாளொன்றுக்கு நூறு பொன் வாங்கிக் கொண்டு, ஆடிப்பாடி, ஆசை மொழி பேசி, அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்து வந்தாள். அவள் அழகைப் போல் மமதையும் படைத்தவள். மிகவும் வம்புக்காரி. அவளை அந்நகரத்தில் எவராவது, கனவிலே கண்டு களித்தோமென்று சொன்னாலும் அவர்களைத் தேடிப் பிடித்து, "கனவிலே கண்டு களித்தாயே, கைமேலே நூறு பொன் வைக்க வேண்டும்," என்று வாதிட்டு, வழக்காடி, நூறு பொற்காசுகளை வாங்கினாலொழிய விடமாட்டாள். அவளுடைய மாளிகைக்கு அவ்வூர் அரசன், மந்திரி, சேனாதிபதி முதலான ஏழு காதலர்கள் முறையாக வந்து போய்க்கொண்டிருந்தனர். அந்த எழுவரில் கிளியின் எஜமான் சோமசுந்தரமும் ஒருவராவார்.

இவ்வாறிருக்கையில், அதே நகரத்தில் அப்பா சாஸ்திரி, சுப்பா சாஸ்திரி என்று இரு நண்பர்கள் இருந்தனர். அவர்களிருவரும்

ரூபசௌந்தரியிடம் மோகங்கொண்டு அலைந்தார்கள். ஆனால் அவர்கள், கையில் காசில்லாத ஏழைகளாயிருந்தனர். ஒரு நாள் காலையில் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கையில் அப்பா சாஸ்திரி, தன் நண்பனான சுப்பா சாஸ்திரியிடம், "நூறு பொன் வாங்கும் ரூபசௌந்தரி நேற்றிரவு என் கனவில் வந்தாள். நான் அரைக் காசு கூட கொடுக்காமல் அவளோடு களித்திருந்தேன்! அந்தக் கனவின் சுகம் ஒன்றே எனக்குப் போதும்," என்று பெருமூச்செறிந்தான். அங்குத் துணி துவைக்க வந்த ரூபசௌந்தரியின் வேலைக்காரி இதைக் கேட்டுவிட்டு, ஓடிப்போய் தன் எஜமானியிடம் இச்செய்தியை அறிவித்தாள். உடனே ரூபசௌந்தரி அங்கு வந்து அப்பா சாஸ்திரியைப் பிடித்துக் கொண்டு, "நூறு பொன்னை எண்ணி என் கையிலே வை," என்று கேட்டாள்.

அப்பா சாஸ்திரிக்கும் ரூபசௌந்தரிக்கும் வாக்குவாதம் முற்றிவிடவே, வழக்கு அவ்வூர் அரசனிடம் சென்றது. அரசனாலும் மந்திரியாலும் பஞ்சாயத்தினராலும் தீர்க்க முடியாத இவ்வழக்கு இறுதியில் சோமசுந்தரம் செட்டியாரின் கடையிலுள்ள நீதிவாக்கியக் கிளியின் முன் விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கிற்கு என்ன தீர்ப்பாகப் போகிறதென வியந்த ஊர் மக்கள் அனைவரும் அங்குக் கூடிவிட்டனர். கிளி இருவருடைய வாதங்களையும் தனித்தனியே கேட்டறிந்தது. பிறகு ரூபசௌந்தரியிடம், "இந்த ஏழையோ உன்னைக் கனவில்தான் கண்டான். அது உன்னை நேரில் கண்டு களித்ததற்கீடாகுமா?" என்று கேட்டது.

"கிளியே, என்னைக் கனவில் கண்டபோதே, நேரில் கண்டு அடையும் ஆனந்தத்தை இவன் அடைந்துவிட்டான். நான் கனவில் தோன்றி அவனுக்கு அந்த ஆனந்தத்தை அளித்திருப்பதால், அதற்குப் பிரதியாக நூறு பொன்னை எண்ணி வைக்கத்தான் வேண்டும்," என்று ரூபசௌந்தரி உறுதியாக வாதிட்டாள்.

அவளுடைய கர்வத்தையும் கொட்டத்தையும் அடக்க வேண்டுமென்று எண்ணிய நீதி வாக்கியக் கிளி, தன் கடைச் சிப்பந்திகளை ஏவி, நூறு பொற்காசுகளை எண்ணி ஒரு பொன் முடிப்பாகக் கட்டச் செய்து, நடுத்தெருவில் ஒரு கம்பத்தை நாட்டி, அதன் உச்சியில் அந்தப் பொன் முடிப்பை வைத்துக் கட்டி அதன் கீழே ஒரு கண்ணாடியில் அந்தப்

பொன் முடிப்பின் பிரதிபிம்பம் விழும்படி செய்யச் சொல்லிற்று. அவர்களும் அவ்வாறே செய்தனர்.

பிறகு நீதி வாக்கியக் கிளி, "ரூபசௌந்தரியே, கனவிலே உன்னைக் கண்டு களித்ததால், அதற்குப் பிரதியாக நூறு பொன் கொடுக்க வேண்டுமென்பது உன் வாதம்! அது சரியே! பிரதியாக இதோ, இந்தக் கண்ணாடியில் பிரதிபலிக்கும் நூறு பொற்காசுகளை உன்னால் முடிந்தால் இக்கண்ணாடிக்குள்ளிருந்து எடுத்துச் செல்," என்றது.

அதைக் கேட்டதும் அங்குக் கூடியிருந்தவர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்து, அதுவே நியாயமான தீர்ப்பு என்று ஆரவாரித்தனர். அங்கு அனைவர் முன்னும் ரூபசௌந்தரி தலை குனிய வேண்டியதாயிற்று.

உடனே அவள், அளவற்ற ஆத்திரமும் ரோஷமும் கொண்டு, "அற்பக் கிளியே, என்னை இவ்விதம் பலர் முன் தலையிறக்கம் செய்து அவமானப் படுத்தியதற்கு உன்னைப் பழி வாங்குகிறேன் பார்! உன் வாயைக் கிழித்து, உன்னைத் துண்டு துண்டாக வெட்டி, உன் தலையைச் சமைத்துச் சாப்பிடுகிறேன் பார். இந்தச் சபதத்தை இன்று முதல் எட்டு நாளைக்குள் நிறைவேற்றாவிட்டால் என் பெயர் ரூபசௌந்தரி இல்லை," என்று சபதம் செய்தாள்.

அப்போது கிளியும், "மமதை பிடித்த மங்கையே! நீ சபதம் செய்வதால் நானும் சபதம் செய்கிறேன். உன் தலையை மொட்டையடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கோவிந்தா! கோவிந்தா! என்று உன்னைத் திருமாலின் கோவிலைச் சுற்றி மும்முறை வலம் வர வைத்து, உன்னைப் பார்த்து ஊர் சிரிக்ககும்படி செய்யாவிட்டால், நானும் இந்தச் சோமசுந்தரம் செட்டியாரின் கடைக்குப் பெருமை தரும் நீதிவாக்கியக் கிளியல்ல!" என்றது.

அந்தக் கிளியை எப்படியும் வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற ஆத்திரத்துடன் சென்ற ரூபசௌந்தரி, தன் மாளிகைக்குச் சோமசுந்தரம் செட்டியார் முறைப்படி வரும் இரவன்று, பள்ளியறை வாசல் கதவை இழுத்துச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு ஊடல் செய்தாள். போதையோடு வந்த

இளஞ்செட்டியாருக்கு மோக போதை அதிகரிக்கும்படி செய்து அவருடைய கடையிலுள்ள கிளியைக் கொண்டு வந்து கொடுத்தால்தான், கதவைத் திறந்து அவரை ஏற்றுக் கொள்ள முடியுமென்று கூறிவிட்டாள். மோகாவேசத்தின் உந்துதலால் இளஞ்செட்டியாரும் அர்த்த இராத்திரியில் தம் கடைக்குச் சென்று கிளியைக் கூண்டோடு தூக்கி வந்து ரூபசௌந்தரியின் கையில் கொடுத்துவிட்டார்.

காலையில் ரூபசௌந்தரி கிளியைப் பார்த்து, "கிளியே, உன் சபதம் என்னவாயிற்று? இன்று உன்னைச் சமைத்து, உன் தலையைக் கடித்துத் தின்னப் போகிறேன்," என்று கேலி பேசி, வேலைக்காரியைக் கூப்பிட்டுக் கிளியைக் கொடுத்துச் சமைக்கும்படிக் கூறிவிட்டு, வழக்கம் போல் பெருமாள் கோவில் குளத்தில் குளித்து வரச் சென்றாள்.

ரூபசௌந்தரி தினந்தோறும் பெருமாள் கோவில் குளத்தில் குளித்து அதன் கரையிலிருக்கும் பெருமாள் கோவில் சுவாமியைத் தரிசனம் செய்துவிட்டுத்தான் வீடு திரும்புவது வழக்கம். அவளுக்குச் சில நாட்களாகவே உடலுடன் கூண்டோடு வைகுந்தம் போகவேண்டுமென்ற ஆசை தோன்றியிருந்தது. ஆகவே, தினமும் காலையில் குளத்தில் குளித்துவிட்டு, பெருமாளைத் தியானித்து, "கோவிந்தா! என்னை இந்த உடலோடு வைகுந்தம் சேர்த்துவிடு," என்று வேண்டிக் கொள்வாள். பிறகு, "கோவிந்தா, என்னை இந்த உடலோடு வைகுந்தம் சேர்த்துவிடு," என்று கூறிக் கொண்டே கோவிலை மூன்று முறை வலம் வந்த பின்தான் வீட்டிற்குச் செல்வாள்.

ரூபசௌந்தரி வழக்கம்போல் பெருமாள் கோவிலில் குளித்துவரச் சென்றதும், வேலைக்காரி கூண்டைத் திறந்து கிளியைக் கையிலெடுத்தாள். அதுவே தக்க தருணமென்று எண்ணிய கிளி, பட படவென்று தன் சிறகுகளை அடித்துக் கொண்டு, வேலைக்காரியின் முகத்திலும் கண்களிலும் தன் விரல் நகங்களால் பிராண்டித் தள்ளியது. அவள் பயந்து பிடியை விட்டு விட்டாள். உடனே கிளி தப்பிப் பறந்து சென்று, அவ்வூரிலுள்ள பெருமாள் கோவிலின் மாடத்தில் மற்றக் கிளிகளில் ஒன்றாக வசிக்கத் தொடங்கியது.

சபதமிட்ட கிளி தப்பிவிட்டதைத் தன் எஜமானியிடம் சொல்லத்

தைரியமில்லாத வேலைக்காரி, ஒரு கௌதாரியை வாங்கி வந்து, அதைக் கொன்று சமைத்து வைத்துவிட்டாள். இதையறியாத ரூபசௌந்தரி, தன் சபதம் நிறைவேறிவிட்டதென்று கொக்கரித்தவளாய், அதன் தலையை ஆத்திரத்துடன் கடித்துச் சாப்பிட்டாள்.

அடுத்த நாள் காலையில் ரூபசௌந்தரி கோயில் குளத்தில் குளித்துவிட்டு, "கோவிந்தா, என்னை இந்த உடலோடு வைகுந்தம் சேர்த்துவிடு," என்று வேண்டிக் கொள்வதை, கோயிலின் மாடத்தில் சஞ்சரித்த கிளிகளில் ஒன்றாகிய விக்கிரமாதித்தக் கிளி கவனித்தது. தந்திரத்தால் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என எண்ணிய கிளி, ஒரு நாள் காலையில், யாருக்கும் தெரியாமல், கோயில் விக்கிரகத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டது.

ரூபசௌந்தரி வழக்கம் போல் குளித்துவிட்டு, பெருமாள் சந்நிதிக்கு வந்து, பெருமாளைத் தியானித்து, " கோவிந்தா என்னை இந்த உடலோடு வைகுந்தம் சேர்த்துவிடு," என வேண்டினாள். உடனே விக்கிரகத்திற்குப் பின்னால் இருந்த கிளி,

"ரூபசௌந்தரியே, உன் பக்திக்கு மெச்சினோம். இதுகாறும் உனக்கு முக்தி அடையும் நேரம் வரவில்லை. இப்போதுதான் காலம் கனிந்துள்ளது. இன்றிலிருந்து எட்டாவது நாள் வெள்ளிக் கிழமையன்று நி உடலோடு வைகுந்தம் செல்லலாம். அந்நன்னாளில் உன் சொத்துகளை எல்லாம் ஏழை எளியோருக்குத் தானமாக வழங்கிவிட்டு, நெற்றியில் நாமமிட்டுக் காஷாய ஆடை பூண்டு, உன் தலையை மொட்டையடித்து, உன் கூந்தலையெல்லாம் எனக்குக் காணிக்கையாக வைத்துவிடு.

"நீ தெய்வலோகம் செல்லும்போது வழியிலுள்ள பூதகணங்களெல்லாம் உன் மேனியழகைக் கண்டு உன்னைப் பிடித்து வைத்துக் கொள்வார்களாகையால், உன் அழகையெல்லாம் அலங்கோலப்படுத்திக் கொள்ள வேண்டும். உடலெங்கும் சுண்ணாம்பாலும் கரியாலும் புள்ளிகள் வைத்துக் கொள். நான் சொன்ன பிரகாரம் அணு பிசகாமல் செய்துகொண்டு நீ, இன்றிலிருந்து எட்டாவது தினத்தன்று இக்கோவிலுக்கு, 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கன்னத்தில்

போட்டுக்கொண்டு மும்முறை வலம் வந்து ஆகாயத்தை நோக்கி நில். வான வீதியிலிருந்து புஷ்பக விமானம் இறங்கி வந்து உன்னை அழைத்துச் சென்று வைகுந்தத்தில் சேர்க்கும்.

"அங்குள்ள தேவ மாதர்களெல்லாம் உன்னை உபசரித்து வரவேற்று, தெய்வீகத் தடாகத்தில் குளிப்பாட்ட அழைத்துச் செல்வார்கள். அங்குள்ள புனித கங்கையில் நீராடினால் மீண்டும் உன் கூந்தல் வளரும். உன் மேனி அழகு முன்பைவிடப் பதின்மடங்கு சோபையுடன் பத்தரைமாற்றுப் பசும்பொன்னாக மின்னும். நீ வானுலகத்தின் அப்சரஸ்களுக்கெல்லாம் தலைவியாகி அமர நிலை அடைந்துவிடுவாய்," என்று ஆண்டவன் கூறுவதுபோல் கிளி கூறிற்று.

அதை நம்பிவிட்ட ரூபசௌந்தரி, அவ்வூர் அரசனிடம் சென்று, தான் மானிடத் தேகத்தோடு வைகுந்தம் போகப் போவதாகச் சொல்லி; அதை அவ்வூர் மக்களுக்கு பறைசாற்றித் தெரிவிக்க வேண்டும் என்றும்; புஷ்பக விமானத்தில் தான் உடலோடு வைகுந்தம் போகும் காட்சியை, மன்னன், மந்திரி, உட்பட அவ்வூர் மக்களெல்லாம் வந்து காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். மன்னனும் ரூபசௌந்தரியின் கோரிக்கையை ஏற்று, இன்றிலிருந்து எட்டாவது நாள், பெருமாள் ஆலயத்தில், வானவீதியிலிருந்து புஷ்பக விமானம் இறங்கிவந்து, ரூபசௌந்தரியை உடலோடு வைகுந்தம் கொண்டு செல்லவிருக்கிறது. இந்த அதிசயத்தை எல்லாரும் கண்டு களியுங்கள்," என ஊர் முழுதும் பறைசாற்றித் தெரிவிக்க ஏற்பாடு செய்தான்.

எட்டு நாள்களுக்குள் ரூப சௌந்தரி தன் ஆஸ்திகள் அனைத்தையும் தான தருமம் செய்து, எட்டாவது நாள், நெற்றியில் நாமமிட்டு, காஷாய உடை தரித்து தலையை மொட்டையடித்து, உடலெங்கும் கரும்புள்ளி செம்புள்ளிகளைக் குத்திக்கொண்டு பெருமாள் கோவிலுக்கு வந்து,

"ஹா! நாராயணா! கோவிந்தா! கோவிந்தா!" என்று பஜனை செய்தபடி கோவிலை வலம் வந்து, பெருமாளின் எதிரில் நின்று, "ஸ்வாமி, தங்களின் சித்தப்படி அடியாள் வந்திருக்கிறேன். தாமதமின்றி புஷ்பக

விமானத்தை அனுப்பி, இந்த உடலோடு என்னை வைகுந்தம் சேர்த்து விடுங்கள்,” என்று கூறி நீல வானத்தை நோக்கினாள். இந்த அதிசயத்தைக் காண அங்குக் கூடியிருந்த மக்கள் கூட்டம், வானத்தை நோக்கி வாய் பிளந்தபடி நின்றது.

வெகு நேரமாயிற்று. புஷ்பக விமானம் வான வீதியிலிருந்து இறங்கி வரவேயில்லை.

"கோவிந்தா! கோவிந்தா! அடியாள் இன்னும் எவ்வளவு நேரம் காத்திருப்பது ஸ்வாமி," என்று ரூபசௌந்தரி புலம்பினாள்.

அப்போது கோபுரத்திலிருந்த கிளிக் கூட்டத்திலிருந்து பறந்து வந்து, ஒரு கம்பத்தில் உட்கார்ந்த விக்கிரமாதித்தக் கிளி ரூபசௌந்தரியை நோக்கி,

"அடியே ரூபசௌந்தரி, என்னைச் சமைத்துச் சாப்பிடுவதாக நீ சபதம் செய்தாய். உன்னை இந்நிலைக்கு ஆளாக்குவதாக நான் சபதம் செய்தேன். பேதைப் பெண்ணே! யார் சபதம் நிறைவேறியது? மானிட தேகத்தோடு வைகுந்தம் செல்ல முடியுமா? நான் சிலையின் பின்னாலிருந்து பேசியதை நம்பிவிட்டாயே!”, என்று கூறி, அங்குக் கூடியிருந்த மக்களிடம் சபதத்தின் விருத்தாந்தத்தை எடுத்துக் கூறியது.

இதைக் கேட்ட மக்கள் யாவரும் விழுந்து, விழுந்து சிரித்தனர். அவமானம் தாங்க முடியாத ரூபசௌந்தரி அவ்விடத்திலேயே விழுந்து உயிரை விட்டாள்.

இது ஒரு கதையே என்றாலும், இந்த ரூபசௌந்தரியைப் போன்ற மக்கள் இவ்வுலகில் பலர் உள்ளனர். இவ்வாறான மக்களின் பக்தியே பொய்யான பக்தி. ஏன்?

இவர்கள் ஆலயம் போவார்கள்; இறைவனைத் தியானிப்பார்கள்; சடங்கு சம்பிரதாயங்களைச் செய்வார்கள்; ஆனால், தூய்மையற்ற இவர்கள் தங்களைத் தூய்மைப் படுத்த முயற்சி செய்வதில்லை; மாசு

நிறைந்த இவர்கள் தங்களைப் புனிதமாக்க முயற்சி செய்வதில்லை. தீயொழுக்கத்தில் கிடைக்கும் பொருளிலும், இன்பத்திலும் மயங்கி, நன்னெறிகளை அலட்சியப் படுத்தி, இரகசியமாகவோ, பலர் அறியவோ குற்றச் செயல்களைச் செய்வார்கள்.

இவர்கள் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், தீயொழுக்கத்தில் சென்று தீய கருமங்களைச் செய்வதால், இவர்களிடம் பாவங்கள் கூடும் , அறம் குறையும். அதன் காரணமாக இவர்கள் இழிந்த செயல்களைச் செய்து இங்கும் துன்புறுவார்கள்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின் தீய கதிக்குப் போவார்கள்.

"ஆலயம் சென்று இறைவனை வழிபடுகிறோம்; சடங்கு சம்பிரதாயங்கள் செய்கிறோம்; அதனால் பாவங்கள் நம்மை அண்டாது; பாவம் நம்மைத் தண்டிக்காது; பாவங்களை நாம் கழுவி விட்டோம்," எனத் தவறான கருத்துகளைப் பின்பற்றி, குற்றச் செயல்களைத் தொடர்ந்து செய்து வருவார்கள் இவர்கள்.

ஒரு பானையில் நீர் சொட்டுச் சொட்டாக விழுந்தாலும், காலத்தில் பானையில் நீர் நிரம்பிவிடும். அதுபோல், ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், சிறுகச் சிறுகப் பாவங்கள் செய்து, பாவத்தால் இவர்கள் நிரம்பி விடுவார்கள். ஆகவே, இவர்களின் பக்தி பொய்யான பக்தி ஆகும்.

இவர்களுடைய ஆலய வழிபாடும், சடங்கு சம்பிரதாயங்களும் இவர்களைத் தீய கதியிலிருந்து காப்பதில்லை; நரகத்திலுருந்து காப்பதில்லை; பேய்ப்பிறப்பிலிருந்து காப்பதில்லை; மிருகப் பிறப்பிலிருந்து காப்பதில்லை. ஆகவே இத்தகையோரின் பக்தி பொய்யான பக்தி.

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 2. பக்திக்கு அடிப்படை நல்லொழுக்கம்.

எதற்காக நாம் பக்தி கொள்ள வேண்டும்? பக்தியின் நோக்கம்தான் என்ன?

நாம் நம்மையே ஆராய்ந்து பார்த்தோமென்றால், நம்மிடம் பல குறைபாடுகள் இருப்பதை உணரலாம். குறைபாடுகள் என்பது நம்மிடம் உள்ள குற்றம் குறைகள்.

உதாரணத்திற்கு, பிறர் செல்வாக்கைக் கண்டு பொறாமைப் பட்டிருப்போம்; பொறாமையினால் குற்றமற்றோர் மீது குற்றம் சுமத்தியிருப்போம்; குற்றம் செய்துவிட்டு அது நியாயமானதே என்று விவாதித்திருப்போம்; நம் குற்றத்தை மறைக்கப் பிறர் மீது பழி சுமத்தியிருப்போம்; நம் குற்றத்தை மறைத்து நல்லவரைப்போல நடித்திருப்போம்; தற்பெருமையில் தன்னை உயர்த்தியும், பிறரைத் தாழ்த்தியும் பேசி இருப்போம்; நல்லோரின் நல்லொழுக்க நெறிகளைப் பரிகசித்திருப்போம்; சினம் கொண்டு வைதிருப்போம்; சண்டை சச்சரவு செய்திருப்போம்; பிறரைப் பழித்துப் பேசியிருப்போம். இதுபோல் பல குறைபாடுகள் நம்மிடம் இருப்பதை நாம் உணரலாம்.

நம்மிடமுள்ள குறைபாடுகளை, நம்மிடமுள்ள அசுத்தங்கள் எனப் பெரியோர் கூறுவர். நம்மிடம் பல அசுத்தங்கள் உண்டென்பதால், நம்மைத் தூய்மையற்றோர் என்றும், அசுத்தமானவர்கள் என்றும் பெரியோர் கூறுவர். புறத்தே நாம் உடலைக் கழுவி ஆடை ஆபரணங்களால் அழகுபடுத்திக் கொண்ட போதிலும், அகத்தே நம்மிடம் பல குறைபாடுகள் உண்டென்பதால், நம்மை அசுத்தமானவர்கள் எனப் பெரியோர் கூறுவர்.

நம்மிடமுள்ள அசுத்தங்கள் நம் நலனைக் கெடுக்கும்; நம் பெருமையைக் கெடுக்கும்; நம் புகழைக் கெடுக்கும்; நம் பொருளை அழிக்கும்; நம் சுகத்தைக் கெடுக்கும்; உள்ளிருந்தே கொல்லும் நோயைப் போல், நம்மிடமுள்ள அசுத்தங்கள் நம் வாழ்வைக் கெடுக்கும்.

வாழ்வில் சுகம் பெற விரும்புவோர், தம்மிடமுள்ள அசுத்தங்களைப் போக்க வேண்டும். எவ்வாறு நாம் அணிந்திருக்கும் ஆடையில் தீப்பற்றிக் கொண்டால், முழுக் கவனத்தையும் தீயின் மீது செலுத்தித் தீயை அணைக்கிறோமோ அதுபோல், நம்மிடமுள்ள அசுத்தங்கள் நம்மை அழிக்கும் என உணர்ந்து, அவற்றை உடனே போக்க வேண்டும்.

எப்படி நம்மிடமுள்ள அசுத்தங்களை நாம் போக்குவது? பக்தியினால் நம்மிடமுள்ள அசுத்தங்களை நாம் போக்கலாம். அதாவது,

தூய்மையற்ற நாம் நம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்கும்; அசுத்தமான நாம் நம்மைப் புனிதமாக்கிக் கொள்வதற்கும்; மாசு படிந்துள்ள நம் மனத்தை நாம் தூய்மைப் படுத்திக் கொள்வதற்கும்; நாம் பக்தி கொள்ள வேண்டும். உள்ளத்தில் பக்தி கொண்டு, நம்மிடமுள்ள அசுத்தங்களை நாம் போக்கினோமென்றால், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெற்று; உடலை விட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகிலும் தெய்வலோகச் சிறப்பைப் பெறலாம். இதுவே பக்தி கொள்வதற்கான நோக்கமாகும்.

உடலில் அழுக்கு இருந்தால் அதை எப்படிப் போக்குவது? நீராலும், குளிக்க உபயோகிக்கும் சவர்க்காரத்தினாலும், உடலைச் சுத்தப்படுத்துபவரின் முயற்சியாலும் உடலில் இருக்கும் அழுக்கைப் போக்கலாம். இதுவே உடலைச் சுத்தப்படுத்துவதற்கான சரியான முறையாகும்.

அதுபோல், தூய்மையற்ற நாம், சரியான முறையால் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்; அசுத்தமான நாம் சரியான முறையால் நம்மைப் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்; மாசு படிந்துள்ள நம் மனத்தை சரியான முறையால் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எந்தச் சரியான முறையால்?

இறைவனின் அருளால் சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை (நன்னெறி உபதேசங்களை) கற்க வேண்டும். அல்லது, கல்வி அறிவும் அன்பும் அறமும் பக்தியும் உள்ள நல்லோரை நாடி, அவர்கள்

கூறும் தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்க வேண்டும்.

தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்கும் ஒருவர், "பாவம் உண்டு; புண்ணியம் உண்டு; நல்வினை உண்டு; தீ வினை உண்டு; நல்லொழுக்கம் உண்டு; தீயொழுக்கம் உண்டு; செயல்களுக்குப் பிற்பயன் உண்டு; அடுத்த உலகம் உண்டு; அடுத்த உலகில் உயிர்கள் தம் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டும்," எனப் புரிந்து கொள்வார்.

"பாவ கருமங்களைச் செய்வோர், இவ்வுலக வாழ்விலும் துன்பப்படுவார்கள்; மரணத்திற்கு அப்பால், அடுத்த உலகிலும் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறந்து துன்பப்படுவார்கள்," என இவர் புரிந்து கொள்வார்.

"குற்றங்களைத் தவிர்த்து, நல்லொழுக்கங்களை மேற்கொண்டு, நற்கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்வோர், இவ்வுலக வாழ்விலும் சுகம் பெறுவார்கள்; மரணத்திற்கு அப்பால் அடுத்த உலக வாழ்விலும் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்கள்," என இவர் புரிந்து கொள்வார்.

இவை யாவற்றையும் புரிந்து கொண்ட இவர், அறியாமையில் இருந்து விலகி, அறிவுடைமையைப் பெறுவார். அறிவுடைமையைப் பெற்ற இவர், தம்மிடமுள்ள அசுத்தங்களைக் காண்பார். அறிவுடைமையினால் தம்மிடமுள்ள அசுத்தங்களைக் கண்ட இவர், அடுத்து அசுத்தங்களைப் போக்க முயற்சி செய்ய வேண்டும்.

எப்படி முயற்சி செய்ய வேண்டும்?

உள்ளத்தில் பக்தி கொண்டு, இதுநாள்வரை செய்துள்ள குற்றங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இனிமேலும் இது போன்ற குற்றங்களைச் செய்வதில்லை என உறுதி பூண்டு, தீயொழுக்கத்தில் இனிமேலும் செல்லாமல் தம்மைக் காத்து, நல்லொழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குற்றங்களைத் தவிர்க்கவும், நல்லொழுக்க நெறிகளை மேற்கொள்ளவும், மனம் தளர்ச்சி அடையாமல் போராட வேண்டும். மனம் தளர்ச்சி அடையாமல் போராடினாரென்றால், படிப்படியாக அசுத்தங்கள் இவரை விட்டு விலகும். பக்தியிலும் அறத்திலும் நற்குணங்களிலும் நற்பண்புகளிலும் இவர் வளர்ந்து தூய்மையடைவார். இவ்வுலக வாழ்விலும் இவர் சுகம் பெறுவார்; மரணத்திற்கு அப்பால் மறு உலகில் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார்.

இப்படித்தான் தூய்மையற்ற உயிர்கள் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்; அசுத்தமான உயிர்கள் தம்மைப் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்; இதுவே சரியான பக்தி. இத்தகைய பக்தியையே சான்றோர் “மெய்யான பக்தி” எனக் கூறியுள்ளனர்.

தெய்வலோகம் இன்பமானது; விரும்பி வரவேற்க வேண்டியது; ஆனால், பெறுவது கடினம். வேண்டுவதாலோ, அல்லது ஏங்குவதாலோ ஒருவருக்குத் தெய்வலோகம் கிட்டாது. அதாவது, "நான் தெய்வலோகம் போக வேண்டும்” என நாள்தோறும் வேண்டுவதாலோ, தெய்வலோகத்தை நினைத்து ஏங்குவதாலோ, ஒருவருக்குத் தெய்வலோகம் கிட்டாது. தெய்வலோகத்தை அடைய விரும்புவோர், தெய்வலோகம் செல்லும் பாதையில் அடியெடுத்து நடக்க வேண்டும்.

"தெய்வலோகம் போகும் பாதையில் அடியெடுத்து நடக்க வேண்டும் என்றால் என்ன?"

நல்வழியில் நடந்து நல்வாழ்வு வாழ வேண்டும். தன் நடத்தையில் நல்லொழுக்க நெறிகளை மேற்கொள்ள வேண்டும். ஒழுக்கக் கேட்டைக் கைவிட வேண்டும். தீமையானவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். அறநெறி ஒழுக்க நெறிகளால் தன்னை அடக்கியாள வேண்டும்.

பழிக்கு அஞ்ச வேண்டும். "குற்றம் செய்தால் நல்லோர் பழித்துப் பேசுவார்களே! இகழ்ந்துரைப்பார்களே! கெட்டவன் என்றும் நடத்தையில் ஒழுக்கம் இல்லாதவன் என்றும் தூற்றுவார்களே! என் நட்பை விரும்பமாட்டார்களே!" எனப் பழிக்கு அஞ்சி, பிறர் பழித்துரைக்கும் குற்றச்

செயல்களைச் செய்யாது தன்னைக் கவனமாய்க் காத்துவர வேண்டும்.

பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்ச வேண்டும். "பாவச் செயல்கள் பின்னால் துன்பம் தருமே! பாவச் செயல்களுக்கு இவ்வுலகிலும், அடுத்த உலகிலும் தண்டனை உண்டே! அப்படியே இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டாலும், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகத் தண்டனையிலிருந்து தப்ப முடியாதே!" எனத் தண்டனைக்கு அஞ்சி, பாவச் செயல்களை முழுமையாக விட்டுவிட வேண்டும்.

எவரொருவர் பழிக்கும் பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சி; தீயொழுக்கங்களைக் கைவிட்டு; நல்லொழுக்க நெறிகளால் தன்னை அடக்கி ஆள்கிறாரோ அவரிடம், அறமும் நற்பண்புகளும் நற்குணங்களும் வளரும். இவரே தெய்வலோகத்திற்குப் போகும் பாதையில் அடியெடுத்து நடப்பவர். இவருக்கு இங்கும் சுகம்; அடுத்த உலகிலும் சுகம்.

இதையே திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

***சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு***

(விளக்கம்: நல்லொழுக்க நெறிகளால் தம்மை அடக்கியாண்டு, குற்றமில்லாக் கருமங்களைச் செய்வோர், நற்பண்புகளையும் பொருளையும் இன்பத்தையும் பெறுவர். மற்றும் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மறு உலகில் தெய்வலோகச் சிறப்பையும் பெறுவர். ஆகவே, இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் சுகம் பெற விரும்புவோர், அறநெறி ஒழுக்க நெறிகளால் தம்மை அடக்கி ஆள வேண்டும்.)

இவருடைய நடத்தையில் நல்லொழுக்கம் உண்டென்பதாலும்; மற்றும் அறமும் நற்பண்புகளும் நற்குணங்களும் உண்டென்பதாலும், இவர் நல்வழியில் நடந்து, நல்வாழ்வு வாழ்பவர்; இறைவழியில் நடப்பவர்; இறை வழியில் நடக்கும் இவர் உள்ளத்தில் , "நான்" என்னும் அகந்தை

படிப்படியாகக் குறையும். இவர் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்தார் என்றால், உழுத மண்ணில் விதைத்த விதை போல, இவர் உள்ளத்தில் பக்தி வளரும். இவர் இவ்வுலக வாழ்விலும் சுகம் பெற்று; அடுத்த உலகிலும் தெய்வலோகச் சிறப்பைப் பெறுவார். இதுவே மெய்யான பக்தி.

இதை அறியாத ரூபசௌந்தரி, தன்னைப் பக்தை என எண்ணிப் பெருமை கொண்டதால், விக்கிரமாதித்தக் கிளி இவளை, "பேதைப் பெண்ணே," என்றழைத்தது. உண்மையில் இவள் ஒரு பேதைப் பெண்தான். நல்லொழுக்க நெறிகளால் தம்மை அடக்கி ஆளாதோரின் பக்தி, இந்த ரூபசௌந்தரியின் பக்தியைப் போன்றதுதான்.

மெய்யான பக்தியின் பலனைப் பகவான் புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்:

*"நற்கருமங்களைச் செய்தவன் உலக வாழ்வில் இன்பமடைகிறான்; அடுத்த உலகிலும் இன்புறுகிறான்; ஈருலகிலும் இவனுக்கு இன்பமே; நான் செய்த புண்ணியம் என்று அவன் இன்பமடைகிறான். பேரின்ப நிலையில் அவன் மேலும் அதிகமாய் இன்புறுகிறான்."*

*"தூர தேசத்தில் நெடுங்காலம் தங்கியிருந்தவன் நலமாகத் திரும்பி வருகையில் சுற்றத்தாரும் நண்பர்களும் அன்பர்களும் அவனைக் களிப்போடு வரவேற்று உபசரிப்பார்கள்."*

*அவ்வாறே, புண்ணியம் செய்தவன், இவ்வுலகை விட்டு மறு உலகம் செல்லும்போது, அவன் செய்த புண்ணியங்கள் (முன்னதாக அங்குச் சென்று) சுற்றத்தார் அன்பன் திரும்பி வருகையில் வரவேற்பது போல், அவனை அங்கு வரவேற்கின்றன.*

நல்லொழுக்கம் ஈருலகிலும் நன்மை தரும் என்றும்; தீயொழுக்கம் ஈருலகிலும் துன்பம் தரும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

***நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் - தீயொழுக்கம்***
***என்றும் இடும்பை தரும்.***

(விளக்கம் : நல்லொழுக்கம் தூய்மையான வாழ்வுக்குக் காரணமாகையால், நல்லொழுக்கம் இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் இன்பம் தரும். தீயொழுக்கம் பாவம் செய்தலுக்குக் காரணமாகையால், தீயொழுக்கம் இவ்வுலக வாழ்விலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின் அடுத்த உலகிலும் துன்பத்தையே தரும்.)

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 3. பாகற்காய் கசந்த கதை.

ஓர் ஊரில், சிறந்த கல்வியும் அறமும் அன்பும் நிரம்பிய பக்தியும் உள்ள ஒரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவருடைய அறிவுடைமையையும் நற்குணங்களையும் நற்பண்புகளையும், அவருடைய தூய்மையான வாழ்க்கையையும் கண்ட அவ்வூர் மக்கள், அவரை மதித்து மரியாதை செய்தனர். அவ்வூர் மக்களில் சிலர் அவரிடம் சென்று, அவர் கூறும் நல்லுபதேசங்களைக் கேட்டு வந்தார்கள்.

அவ்வூர் மக்களில் சிலர் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போக விரும்பினார்கள். அவர்களில் சிலர், "புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போகும் நாம், பெரியவரிடம் சென்று, அவருடைய ஆசீர்வாதத்துடன் பயணத்தைத் தொடங்கலாம்," எனக் கூறினார்கள். அதற்கு யாவரும் ஏகமனதாகச் சம்மதித்தனர்.

யாத்திரைக்குப் போகும் நாளன்று, அனைவரும் பெரியவரிடம் சென்றனர். தாங்கள் யாத்திரைக்குப் போகவிருப்பதைத் தெரிவித்தனர். பெரியவரின் ஆசீர்வாதத்துடன் தாங்கள் யாத்திரையைத் தொடங்கவிருப்பதாகக் கூறி, தங்களை ஆசீர்வதித்து அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர்.

பெரியவரும் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து, "இறைவன் அருளால் யாத்திரை சென்று நலமுடன் திரும்ப வேண்டும்,' என

ஆசீர்வதித்தார். அப்போது அவர்கள், “புண்ணியத் தலங்களில் தங்களுக்கு ஏதேனும் ஆக வேண்டியது இருந்தால் கூறுங்கள். தவறாமல் செய்து வருகிறோம்,” என்று பெரியவரிடம் கூறினார்கள்.

இதைக் கேட்ட பெரியவர், அவர்களிடம் ஒரு பாகற்காயைக் கொடுத்து, “நீங்கள் போகும் ஆலயங்களுக்கெல்லாம் இதையும் கையோடு எடுத்துச் செல்லுங்கள்; நீங்கள் ஆலயங்களை வலம் வரும்போது இதையும் கூடவே எடுத்துச் செல்லுங்கள் ; நீங்கள் எங்கெல்லாம் புனித நீராடுகிறீர்களோ, அங்கெல்லாம் இதையும் அந்நீரில் குளிப்பாட்டுங்கள்; திரும்பி வரும்போது இதைப் பத்திரமாகக் கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள்,” எனக் கூறினார்.

அவர்களும் அவர் கொடுத்த பாகற்காயை எடுத்துக் கொண்டு யாத்திரையைத் தொடங்கினார்கள். போகும் வழியில் பலவாறு உரையாடிக் கொண்டு சென்றார்கள். "யாத்திரை செல்லும் நம்மிடம் ஒரு பாகற்காயைக் கொடுத்தனுப்புகிறாரே! இதில் ஏதேனும் மர்மம் இருக்க வேண்டும்; அது இப்போது நமக்கு விளங்காது. திரும்பி வந்து பாகற்காயை அவரிடம் கொடுக்கும் போது, அவரிடம் கேட்போம்," எனப் பேசிக் கொண்டு சென்றார்கள்.

அவர்களும் பெரியவர் கேட்டுக் கொண்டது போல், தாங்கள் சென்ற ஆலயங்களுக்கெல்லாம் பாகற்காயையும் எடுத்துச் சென்றார்கள்; ஆலயங்களை வலம் வந்த போதெல்லாம் பாகற்காயையும் உடன் கொண்டு சென்றார்கள்; எங்கெல்லாம் புனித நீராடினார்களோ அங்கெல்லாம் பாகற்காயையும் அந்நீரில் குளிப்பாட்டினார்கள். யாத்திரையை முடித்துக் கொண்டு பாகற்காயைப் பத்திரமாகக் கொண்டு வந்தார்கள்.

தங்களுடைய யாத்திரை நலமாக நிறைவேறியதில் அனைவரும் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஊர் திரும்பியதும், பாகற்காயின் மர்மத்தை அறிய அனைவரும் ஆவலுடன் பெரியவரைக் காணச் சென்றார்கள்.

பெரியவருக்கு வணக்கம் தெரிவித்த பின், இறைவனின் கிருபையாலும் அவருடைய ஆசீர்வாதத்தாலும் யாத்திரை நலமே

நிறைவேறியது என்று கூறி, தொடர்ந்து, அவர் கேட்டுக் கொண்டது போல், தாங்கள் சென்ற ஆலயங்களுக்கெல்லாம் பாகற்காயையும் எடுத்துச் சென்றதாகவும்; தாங்கள் ஆலயங்களை வலம் வந்த போதெல்லாம் பாகற்காயையும் கூடவே எடுத்துச் சென்றதாகவும்; தாங்கள் புனித நீராடிய இடங்களிளெல்லாம் பாகற்காயையும் அந்நீரில் குளிப்பாட்டியதாகவும் கூறி, பாகற்காயை அவரிடம் கொடுத்தார்கள். பாகற்காயின் மர்மத்தை அறிய எல்லாரும் ஆவலுடன் அவரை நோக்கிக் காத்திருந்தார்கள்.

பெரியவர் பாகற்காயைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு கொடுத்தார். பிறகு அனைவரையும் பார்த்து, "பாகற்காய்த் துண்டுகளை வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிடுங்கள்," எனக்கூறினார்.

எல்லாரும் "இது கிடைப்பதற்கரிய வரப்பிரசாதம்" என எண்ணி, பாகற்காய்த் துண்டுகளை ஆவலுடன் வாயில் போட்டு மென்றார்கள். மறுகணமே அனைவரும் முகம் சுளித்து, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தடுமாறினார்கள். அந்தப் பாகற்காய் அப்படிக் கசந்தது!

இதைக் கண்ட பெரியவர், "புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போய் வந்தும், பாகற்காய் கசக்கிறதா?" எனக்கூறி, பாகற்காயின் மர்மத்தை அவர்களுக்கு விளக்கினார்.

"பாகற்காய் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போய் வந்தும், அதனுடைய கசப்பு அதை விட்டுப் போகவில்லை. யாத்திரை போகும் முன்னும் அது கசப்பாகத்தான் இருந்தது; யாத்திரை போய் வந்த பின்னும் அது கசப்பாகத்தான் இருக்கிறது. யாத்திரை போய் வந்ததால் அதனுடைய இயல்பு மாறிவிடவில்லை.

இந்தப் பாகற்காயைப் போன்ற மனிதர்களும் உலகில் உள்ளனர். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போகும் முன்னும் இவர்களிடம் இருந்த தீய சுபாவம், போய்வந்த பின்னும் இவர்களிடம் இருப்பதைக் காணலாம். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போனதால் இவர்களிடமுள்ள தீய சுபாவம் இவர்களை விட்டு விலகி இவர்கள் தூய்மை அடைவதில்லை.

உதாரணத்திற்கு, உள்ளத்தில் கபடம் உள்ள ஒருவர், புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போய் நீராடி வந்ததால் கபடம் அவரை விட்டு விலகி விட்டது என்றாகாது. யாத்திரை போகுமுன் அவரிடமிருந்த கபடம், வந்த பின்னும் அவரிடம் இருப்பதை நாம் காணலாம்.

உங்களையே நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்கள் என்றால், உங்களிடம் பல குறைபாடுகள் உள்ளதை உணர்வீர்கள். இந்தக் குறைபாடுகளே உங்களிடம் உள்ள அசுத்தங்கள். புண்ணியத் தலங்களுக்குப் போனதால் உங்களிடமுள்ள அசுத்தங்கள் நீங்கி தூய்மை பெற்றுவிட்டதாக நீங்கள் எண்ணலாகாது. கூடிய விரைவில், யாத்திரை போகுமுன் உங்களிடமிருந்த அசுத்தங்கள் இன்னும் உங்களிடம் உண்டு என்பதை நீங்களே உணர்வீர்கள்.

தீயொழுக்கத்தில் சென்று குற்றச் செயல்களைச் செய்யும் சிறுமைக் குணம் உள்ள ஒருவர், புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போனபோதிலும், அவருடைய சிறுமைக் குணம் தானாகவே அவரைவிட்டு விலகுவதில்லை. யாத்திரைக்குப் போய்வந்த பின்னும் அவருடைய சிறுமைக் குணம் தீயொழுக்கத்தையே நாடும். ஏன்?

அவர் உள்ளத்தில் இன்னும் அழுக்கு உண்டு. புண்ணியத் தலங்களுக்குச் சென்று நீராடி, புறத்தே உடலைக் கழுவிய போதிலும், அகத்தே, உள்ளத்திலுள்ள அழுக்கை இன்னும் அவர் கழுவவில்லை. புண்ணியத் தலங்களுக்குச் செல்வதாலோ புனித நீராடுவதாலோ உள்ளத்தில் உள்ள அழுக்கைக் கழுவ முடியாது. உள்ளத்தில் உள்ள அழுக்கை எப்படிக் கழுவுவது?

சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, தீயொழுக்கங்களைக் கைவிட்டு, நல்லொழுக்க நெறிகளால் மனத்தை அடக்கியாண்டு, நற்கருமங்களைச் செய்து, நல்வாழ்வு வாழ்ந்தீர்கள் என்றால், உங்களிடம் உள்ள அசுத்தங்கள் படிப்படியாகக் குறையும். மனம் சோர்வுறாமல் தொடர்ந்து போராடினீர்களானால், நாளடைவில் உள்ளம் தூய்மையடையும். இப்படித்தான் உள்ளத்தில் உள்ள அழுக்கைப் போக்கி, உள்ளத்தைத்

தூய்மைப்படுத்த வேண்டும்.

ஆகவே, யாத்திரைக்குப் போய் வந்துள்ள நீங்கள், உள்ளத்தில் பக்தி கொண்டு, இதுநாள்வரை செய்துள்ள குற்றங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோரி, இனி மேலும் அது போன்ற குற்றங்களைச் செய்வதில்லை என உறுதி பூண்டு; தீயொழுக்கங்களைக் கைவிட்டு, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தீர்கள் என்றால், உங்களிடம் உள்ள அசுத்தங்கள் நீங்கி, நீங்கள் தூய்மையடைவீர்கள்.

இதைச் செய்தீர்கள் என்றால், உங்களுடைய யாத்திரை பயன் தரும். அவ்வாறு நீங்கள் செய்யவில்லையானால், நீங்கள் யாத்திரை போயும் பயனில்லை," என அவர்களுக்கு உபதேசம் செய்து, அனுப்பி வைத்தார்.

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 4. பாவங்களைக் கழுவுவது எப்படி.

ஒரு சமயம் பகவான் புத்தர் தம் சிஷ்யர்களுக்கு இவ்வாறு உபதேசம் செய்தார்:

அறநெறிகளை அறிந்து, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து, புண்ணிய காரியங்களைச் செய்பவர் எவரோ அவரே தம் “பாவங்களைக் கழுவுபவர்." எவரொருவரிடம் எண்ணத் தூய்மை, சொல் தூய்மை, செயல் தூய்மை உண்டோ, அவருக்குப் பெயர் "பாவங்களைக் கழுவுபவர்."

இவ்வுபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரிகா பாதாசன் என்ற பிராமணர் பகவான் புத்தரிடம் இவ்வாறு கேட்டார்:

"கௌதமரே, தாங்கள் கங்கையில் நீராடுவதில்லையா?"

"பிராமணரே, கங்கையில் நீராடுவதால் என்ன பயன்?”

“கௌதமரே. கங்கையில் நீராடினால் பாவங்களைக் கழுவிவிடலாம் என மக்கள் கருதுகிறார்கள். கங்கையில் நீராடுவது புண்ணியம் என மக்கள் எண்ணுகிறார்கள். கங்கையில் நீராடினால் செய்த  பாவங்களைக் கழுவிவிடலாம் என்பது மக்களின் நம்பிக்கை."

பகவான் புத்தர் சந்திரிகா பாதாசன் என்ற பிராமணருக்கு இவ்வாறு உபதேசம் செய்தார்:

*"பிராமணரே, கங்கை நதியின் நீர் ஒருவரின் பாவங்களைக் கழுவுவதில்லை.*

*பாவச் செயல்களைச் செய்யும் ஒருவன், நதியில் நீராடித் தன் பாவங்களைக் கழுவ முடியாது. வழக்கமாகப் பாவ செயல்களைச் செய்பவன், "நீராடி என் பாவங்களைக் கழுவிவிடுவேன்," என்றெண்ணி அடிக்கடி நீராடினாலும், நதியின் நீர் அவன் பாவங்களைக் கழுவுவதில்லை.*

*பிராமணரே, நன்னெறியில் நீராடுங்கள். அது உங்கள் பாவங்களைக் கழுவும். நன்னெறியில் நீராடுவோர், தூய்மையடைந்து, நற்கதிக்குப் போவார்கள்.*

*எவரொருவரிடம் மனத்தூய்மை, சொல்தூய்மை, செயல்தூய்மை உண்டோ, எவரொருவர் பாவங்களை விட்டு, நன்னெறியில் தம்மைத் தூய்மைப் படுத்துகின்றாரோ, அவரே , பாவங்களைக் கழுவுபவர். அவருக்குப் பெயர் "பாவங்களைக் கழுவுபவர்.*

*நன்னெறி ஒழுக்கங்களே ஒருவரைத் தூய்மைப்படுத்தும். நதியின் நீர் என்ன செய்யும்? அது உடலைத்தான் தூய்மைப்படுத்தும், அகத்தின் அழுக்கை அது கழுவுவதில்லை.*

*பாவச் செயல்களைச் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள மடையன், அடிக்கடி நதியில் நீராடிய போதிலும், மடையனின் பாவங்களை நதியின் நீர் கழுவுவதில்லை.*

*பிராமணரே, நான் கூறும் இந்த உபதேசத்தில் நீராடுங்கள். அது உங்கள் பாவங்களைக் கழுவும்."*

*உயிர்களுக்குத் துன்பம் செய்ய வேண்டாம். பிறர் பொருளைக் கொள்ளக் கருத வேண்டாம். பிறன் மனைவியை நாட வேண்டாம்.*

*பொய்யும் புறமும் பேச வேண்டாம். கடுஞ்சொற்களை உரைக்க வேண்டாம். சினமும் பகையும் கொள்ள வேண்டாம்.*

*பிறர் செல்வாக்கைக் கண்டு பொறாமை கொள்ள வேண்டாம். உயிர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள். உள்ளத்தில் பக்தி கொண்டு புண்ணிய கருமங்களைச் செய்யுங்கள்.*

*இதில் நீராடுவோர், தங்கள் பாவங்களைக் கழுவுவார்கள். இதில் நீராடும் அறிவுடையோர், தம் பாவங்களைக் கழுவி நற்கதிக்குப் போவார்கள்.*

பகவான் புத்தர் இவ்வாறு உபதேசம் செய்ததும், பிராமணர், "அற்புதம்! அற்புதம்! கௌதமரே, இருளில் வழி தவறி, பாதை தெரியாமல் தடுமாறும் ஒருவருக்கு, விளக்கேற்றிப் பாதையைக் காண்பிப்பது போல், தாங்கள் எனக்குத் தர்மத்தை உபதேசம் செய்துவிட்டீர்கள். இன்றிலிருந்து என்னை, கௌதமரிடமும் தர்மத்திடமும் சங்கத்திடமும் சரணடைந்த சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுங்கள்."

பின் பிராமணர் பகவான் புத்தரிடம் சரணடைந்து, துறவு பூண்டு,

துறவு வாழ்வை மேற்கொண்டார்.

சிலர், தம்மைப் புனிதமாக்கக் கருதி, பல்வேறு பயிற்சிகளாலும், புறக்கோலங்களாலும் தங்களை வருத்திக் கொள்வார்கள். இவையெல்லாம் மனிதர்களைப் புனிதமாக்காது என்றும்; இவர்கள் ஐயத்தில் உழன்று கிடப்பவர்கள் என்றும், சான்றோர் அருளியுள்ள நன்னெறி உபதேசங்களே மனிதர்களைத் தூய்மைப் படுத்தும் என்றும் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

*உத்தம தர்மத்தை உணராமல், ஐயத்தில் உழல்வோனை எதுவும் புனிதமாக்கிவிடாது. ஆடையின்றி அலைதல், சடைத்தலை, புழுதியால் (உடல்) மாசடைதல், உபவாசம், வெறுந்தரையில் கிடத்தல், அசைவின்றி அமர்ந்திருத்தல் ஆகிய எதுவும் மனிதனைப் புனிதமாக்கிவிடாது.*

திருவள்ளுவரும் இதையே இவ்வாறு கூறியுள்ளார்:

***மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்***
***பழித்தது ஒழித்து விடின்.*** *(திருக்குறள்)*

(விளக்கம் : மொட்டையடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் ஒருவனை புனிதமாக்கிவிடாது. சான்றோர் கூறியுள்ள நன்னெறிகளைக் கற்று, அவர்கள் பழித்துள்ளள தீயொழுக்கத்தைக் கைவிட்டு, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தால் போதும். இது ஒருவரைப் புனிதமாக்கும்.)

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 5. பொய்யான பக்தி.

சிலருக்கு அறத்திலும் நல்லொழுக்க நெறிகளிலும் நாட்டமிருக்காது. சான்றோர் கூறியுள்ள தர்ம சீலங்களில் இவர்களுக்கு

நம்பிக்கை இருக்காது. பொருளும் இன்பமும் தேடுவோருக்கு, அறநெறி ஒழுக்கங்கள் தடங்கலாக இருக்கின்றன; இடையூறாக இருக்கின்றன. எனக் கருதுவார்கள். அறநெறிகளை அலட்சியப் படுத்தி, நீதி நியாயத்தைப் புறக்கணித்து, ஒழுக்கம் கெட்டு, மனமறிய குற்றச் செயல்களைச் செய்வார்கள்.

நன்னெறியில் நம்பிக்கை உள்ளோர், ஒழுக்கக் கேட்டினால் கிடைக்கும் பொருளையும் இன்பத்தையும் கண்டு வெட்கி, நாணி, ஒழுக்கக் கேட்டினால் பழியும் பாவமும் உண்டாகும் என அஞ்சி, நல்லொழுக்க நெறிகளால் தம்மைக் காத்துக் கொள்வார்கள். நல்லொழுக்க நெறியினால் தம்மை அடக்கியாளும் மனவலிமை இவர்களிடம் இருக்கும்.

ஆனால், நன்னெறியில் நம்பிக்கை இல்லாதோரோ, ஒழுக்கக் கேட்டினால் கிடைக்கும் பொருளிலும் இன்பத்திலும் மயங்கி; ஒழுக்கக் கேட்டினால் பழியும் பாவமும் உண்டாகும் என்பதை மறந்து, இரகசியமாகவோ பலரறியவோ குற்றச் செயல்களைச் செய்வார்கள். நல்லொழுக்கத்தினால் தம்மை அடக்கியாளும் மனவலிமை இவர்களுக்கிருக்காது.

நன்னெறியில் நாட்டமில்லாத இவர்களை, குற்றங்கள் செய்யும்போது மனசாட்சி உறுத்துவதில்லை என்பதால், தம் ஒழுக்கக் கேட்டிற்கு ஒரு நியாயத்தையும் கூறிக் கொள்வார்கள்.

"எல்லாருமே குற்றங்களைச் செய்கிறார்கள். யார்தான் யோக்கிமானவர்கள்?" என்று கூறிக்கொள்வார்கள்.

"பாவம் செய்யாமல் வாழமுடியாது,” என்பார்கள்.

"யார்தான் பொய் பேசவில்லை; பொய் பேசாமல் வாழ முடியாது; பொய் பேசினால்தான் நம் காரியங்களைச் சாதிக்க முடியும். அது தான் சாமர்த்தியம்," என்பார்கள்.

"பொருளினால்தான் எல்லாம் ஆகும், பொருளை எவ்வழியிலும்

தேட வேண்டும்," என்பார்கள்.

இப்படியெல்லாம் ஒரு நியாயத்தைப் பேசி, நீதி நியாயத்தைப் புறக்கணித்து, மனசாட்சி இல்லாமல், வெட்கமில்லாமல் , பழி பாவங்களுக்கு அஞ்சாமல், பிறரை வருத்தி, பிறருக்குத் துன்பத்தைச் செய்து, பொய்யும் களவும் வஞ்சனையும் செய்து, பொருளும் இன்பமும் தேடுவார்கள்; பதவியும் அதிகாரமும் தேடுவார்கள்.

இத்தகைய மக்களை "ஒழுக்கம் கெட்டவர்கள்" என்றும்; "நடத்தையில் ஒழுக்கமில்லாதவர்கள்" என்றும்; “ஒழுக்கமற்றோர்” என்றும்; "தீயொழுக்கத்தில் செல்வோர்" என்றும்; "வெட்கமில்லாதோர்" என்றும்; "மனசாட்சி இல்லாதோர்" என்றும் பெரியோர் கூறுவர்.

இவர்களில் சிலர் ஆலயம் போவார்கள்; இறைவனைத் தியானிப்பார்கள்; இறைவனைத் துதி பாடி பஜனை செய்வார்கள்; சடங்கு சம்பிரதாயங்கள் செய்வார்கள். ஆனால், "பாவங்கள் செய்கிறோமே! இறைவன் நம் பாவங்களை அறிவாரே “, என மனசாட்சி இவர்களை உறுத்துவதில்லை. தம் ஒழுக்கக் கேட்டிற்காக இவர்கள் இறைவன் முன் வெட்கி, நாணி, உள்ளம் வருந்தி, மன்னிப்புக் கோருவதில்லை.

தாம் செய்துள்ள குற்றச் செயல்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோருவதுமில்லை; இனிமேலும் இது போன்ற குற்றச் செயல்களைச் செய்வதில்லை என உறுதி பூணுவதுமில்லை; தம்மிடமுள்ள ஒழுக்கக் கேட்டைக் கைவிடுவதற்கு முயற்சி செய்வதுமில்லை; நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு முயற்சி செய்வதுமில்லை. ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், இறைவனைத் துதி பாடி பஜனை செய்த போதிலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்த போதிலும்; தொடர்ந்து இரகசியமாகவோ, பலர் அறியவோ குற்றச் செயல்களைச் செய்து வருவார்கள். ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடித் தியானித்த போதிலும் ஒழுக்கம் கெட்டு மனமறியக் குற்றச் செயல்களைச் செய்து வருவதால், இவர்களின் பக்தி பொய்யான பக்தியே!

அறநெறிகளை அலட்சியப் படுத்தி, மனமறிய குற்றச்செயல்களைச்

செய்யும் இவர்களிடம், நற்குணமும் நல்ல பண்புகளும் இருக்காது; நேர்மை இருக்காது; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருக்காது; மாறாக, இவர்களிடம் செருக்கும் சினமும் சிறுமைக் குணமும் இருக்கும். சுயநலம் மிகுந்திருக்கும். செருக்கும் சினமும் சிறுமைக் குணமும் சுயநலமும் பக்தியை எதிர்க்கும். அதன் காரணமாக இவர்கள் உள்ளத்தில் பக்தி வளராது.

அதாவது, இவர்களிடம் ஒழுக்கமும் நற்பண்புகளும் நற்குணமும் இல்லை என்பதாலும்; உள்ளத்தில் செருக்கும் சினமும் சிறுமைக் குணமும் உண்டென்பதாலும்; சுயநலம் மிகுந்திருப்பதனாலும்; இவர்கள் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், இறைவனைத் துதி பாடி பஜனை செய்த போதிலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்த போதிலும், பாறையில் தூவிய விதைகள் போல இவர்கள் உள்ளத்தில் பக்தி வளராது. ஏன்? பக்திக்கு அடிப்படை, நல்லொழுக்கமும் நற்குணமும் நற்பண்புகளும் ஆகும்.

இதை அறியாத இவர்கள், ஆலயம் போய் இறைவனைத் தியானிப்பதனாலும், இறைவனைத் துதிபாடி பஜனை செய்வதனாலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்வதனாலும் தங்களைப் "பக்தன்" எனக் கருதி இறுமாப்பு கொண்டிருப்பார்கள். மெய்யான பக்தி, “நான்” என்னும் அகந்தையை அழிக்கும். ஆனால், உள்ளத்தில் மெய்யான பக்தி இல்லாத இவர்கள், தங்களைப் “பக்தன்" எனக் கருதி இறுமாப்புக் கொண்டிருப்பதால், இவர்களிடம் “நான்” எனும் அகந்தையே மேலோங்கி நிற்கும்.

இவர்கள் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போவார்கள்; புனித நீராடித் தம் பாவங்களைக் கழுவுவார்கள்; விசித்திரமான சடங்குகள் செய்து தம் பாவங்களைக் கழுவுவார்கள். ஆனால் ஒழுக்கக் கேட்டைக் கைவிடுவதில்லை. மாசு படிந்துள்ள தம் உள்ளத்தைத் தூய்மைப் படுத்தக் கருதுவதில்லை. தொடர்ந்து ஒழுக்கம் தவறி, இரகசியமாகவோ, பலரறியவோ குற்றச் செயல்களைச் செய்து வருவார்கள்.

"நாம் ஆலயம் போகிறோம்; இறைவனைத் துதிபாடிப் பஜனை

செய்கிறோம்; புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போகிறோம்; புனித நீராடி நம் பாவங்களைக் கழுவுகிறோம்; அதனால் பாவம் நம்மை அண்டாது; பாவம் நம்மைத் தண்டிக்காது; பாவங்களை நாம் கழுவிவிட்டோம்," என இறுமாப்புக் கொண்டிருப்பார்கள். ஆனால், சிறுகச் சிறுகப் பாவங்கள் செய்து, பாவத்தால் நிரம்பிவிடுவார்கள்.

நன்னெறி ஒழுக்கங்களும், நற்பண்புகளும், நற்குணமும் இல்லாத இவர்கள், உள்ளத்தில் மெய்யான பக்தி இல்லாத இவர்கள், தங்களைப் "பக்தன்” எனக்கருதி, இறுமாப்பு கொண்டிருப்பதால், ரூபசௌந்தரியைப் போல் இவர்களும் பேதைகளே!

ரூபசௌந்தரியோ, தன்னிடம் அழகும் பொருளும் உண்டென்று மமதை கொண்டவள். நடத்தையில் ஒழுக்கமில்லாதவள். ஆணவமும் அகந்தையும் மிகுந்தவள் ; கோபக்காரி; வம்புக்காரி; நீதி நியாயத்திற்குக் கட்டுப்படாதவள்; உள்ளத்தில் பகை பாராட்டி வஞ்சம் தீர்ப்பவள். நன்னெறிகளை அலட்சியப் படுத்தி, பழி பாவத்திற்கு அஞ்சாமல் குற்றச் செயல்களைச் செய்பவள்; சினமும் செருக்கும் சிறுமைக் குணமும் மிகுந்தவள்.

இவள் தினமும் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், பக்திக்கு அடிப்படை நன்னெறி ஒழுக்கங்களும் நற்பண்புகளும் நற்குணமும்தான் என்பதை அறியாததால், தன்னிடமுள்ள குறைபாடுகளைத் தேடவில்லை; தன் பாவங்களுக்காக உள்ளம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோரவில்லை; குற்றங்களைக் கைவிடுவதற்கும், நல்லொழுக்க நெறிகளை மேற்கொள்வதற்கும்; மனமாசுகளை விலக்கி மனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கும் முயற்சி செய்யவில்லை; அசுத்தமான இவள், தன்னைப் புனிதமாக்குவதற்கும், தூய்மையற்ற இவள், தன்னைத் தூய்மைப் படுத்துவதற்கும் முயற்சி செய்யவில்லை.

தான் வைகுந்தம் போக வேண்டும் என இறைவனிடம் இவள் வேண்டிக் கொண்ட போதிலும், தெய்வலோகத்திற்குப் போகும் பாதையை இவள் உள்ளம் விரும்பவில்லை; அப்பாதையில் இவள் அடியெடுத்து நடக்கவுமில்லை ; மாறாக, நரகத்திற்குப் போகும் பாதையில் இவள்

அடியெடுத்து நடந்தவள். நீரில் போட்ட கல்போல இவள் நரகத்திற்குள் விழுவாளே தவிர, இவள் தெய்வலோகம் செல்வதென்பது சாத்தியமாகாது; ஒருபோதும் நடவாது.

தான் கூண்டோடு வைகுந்தம் போகப் போவதை ஊரெல்லாம் பறைசாற்றி; தான் வைகுந்தம் போவதை ஊர் மக்களெல்லாம் பார்த்துத் தன் பக்தியை வானளாவப் புகழ வேண்டும் என விரும்பிய இவளின் மமதைதான் எவ்வளவு பெரிது! இது போன்றதுதான் ஒழுக்கமில்லாதோரின் பக்தி.

கூண்டோடு வைகுந்தம் செல்ல விரும்பிய ரூபசௌந்தரி, மக்களின் சிரிப்புக்கும், ஏளனத்திற்கும் ஆளாகி, அவமானம் தாங்க முடியாமல் உயிர் விட்டாள். ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், இறைவனைத் துதி பாடி பஜனை செய்த போதிலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்த போதிலும், நன்னெறி ஒழுக்க நெறிகளால் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ளாதோரின் பக்தியும் இது போலவே பிறரால் ஏளனப் படுத்தப்படும்.

***ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்***
***ஏதம் படுபாக்கு அறிந்து.*** *-(திருக்குறள்)*

(விளக்கம்: நல்லொழுக்கம் தவறுவதால் உண்டாகும் குற்றத்தையும், இழிவையும் அறிந்து தெளிவு பெற்ற அறிஞர்கள் ஒழுக்கத்தைத் தவறாமல் பேணி வருவர்.)

ஒழுக்கம் தவறுவதால் அப்போது கிடைக்கும் இன்பத்தில் மயங்கி, அறிவிலிகள் ஒழுக்கத்தை விட்டு விடுகிறார்கள். நல்லொழுக்க நெறிகளால் தம்மை அடக்கி ஆளும் மன வலிமை இவர்களுக்கில்லை. அதனால் பழியையும் பாவத்தையும் அடைகின்றனர்.

அறிவுத் தெளிவு பெற்ற அறிஞர்கள், நல்லொழுக்க நெறிகளால் தம்மை அடக்கி ஆளும் மனவலிமை உடையவர்கள். ஒழுக்கம் தவறுவதால் அப்போது கிடைக்கும் இன்பத்தில் மயங்காமல், அச்சிறுமையால் ஏற்படும்

குற்றத்தையும் பழியையும் ஆராய்ந்து, ஒழுக்கத்தை விடுவதில்லை.

***ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்***
***எய்துவர் எய்தாப் பழி*** *-(திருக்குறள்)*

(விளக்கம்: ஒருவர் நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்தால் மேன்மையான நிலையை அடைவார். தீய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்தால் அடையக் கூடாத பழியை அடைவார்.)

ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த ரூபசௌந்தரி, நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்திருந்தாளென்றால், தெய்வலோகச் சிறப்பைப் பெற்றிருப்பாள். ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், இவள் தீயொழுத்தைக் கடைப்பிடித்ததால், அடையக் கூடாத பழியை அடைந்தாள்.

அதுபோல், ஆலயம் சென்று இறைவனைத் தியானித்து, இறைவனின் புகழ்பாடி சடங்கு சம்பிரதாயங்கள் செய்பவரும், நன்னெறி ஒழுக்கத்தால் தன்னை அடக்கி ஆளாமல், தீயொழுக்கத்தைக் கடைப்பிடித்துக் குற்றங்கள் செய்தாரென்றால், மக்களால் பழித்து இகழப்பட்டு, அடையக்கூடாத பழியை அடைவார்.

இவருடைய ஒழுக்கக் கேட்டைக் காணும் மக்கள், "இவர் ஆலயம் போகிறார்; இறைவனைத் துதி பாடி பஜனை செய்கிறார். ஆனால், இவர் நடத்தையில் ஒழுக்கம் இல்லையே! அடக்கம் இல்லையே! நேர்மை இல்லையே! கண்ணியமும் கட்டுப்பாடும் இல்லையே!" என இவரை நிந்தனை செய்வார்கள்.

"பொய்ச் சாட்சி கூறுபவனும், பிறர் பொருளைக் கொள்ளக் கருதுபவனும், பித்தலாட்டக் காரனும், வஞ்சகனும், வேடதாரியும், பிறர் மனைவியை நாடுபவனும் , பிறரை ஏவி விடுவோனும், சுயநலக்காரனும், உள்ளத்தில் பகை பாராட்டி குற்றமற்றோரை நிந்தனை செய்பவனும், இவர்களெல்லாம் ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடி நல்ல கதியை அடையலாம் என்றால், “தர்மம்" என்று ஒன்று இல்லையா?" என இவருடைய

பொய்யான பக்தியை இகழ்வார்கள்.

ஈரமுள்ள மண்ணில் விதைக்கப்பட்ட ஒரு பாகற்காயின் விதை முளைத்து, தன் வேர்களை நிலத்தில் பரப்பி, மற்ற தாவரங்களைப் போல், நீரையும் மற்ற சாரங்களையும் மண்ணிலிருந்து கிரகித்த போதிலும், அதன் காய் கசப்பாகத்தான் இருக்கும். இதற்கான காரணம் என்ன? விதையின் இயல்பு அது.

அதுபோல், ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், நல்ல ஒழுக்கங்களைக் கடைப் பிடிக்காமல், தீயொழுக்கத்தைக் கடைப்பிடிப்பவருடைய எண்ணங்களும் சொற்களும் செயல்களும், அவருடைய நோக்கங்களும், குறிக்கோள்களும் விரும்பத் தகாதனவாகவும், வெறுக்கத் தக்கதனவாகவும், துன்பம் தருவனவாகவும்தான் இருக்கும். இதற்கான காரணம் என்ன?

தீயொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் இவர் மனத்தில் சினமும் செருக்கும் சிறுமைக்குணமும் இருக்கும் என்பதால், இவர் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும் இவருடைய எண்ணங்களும் சொற்களும் செயல்களும், இவருடைய நோக்கங்களும், குறிக்கோள்களும் விரும்பத் தகாதனவாகவும், வெறுக்கத் தக்கனவாகவும், துன்பம் தருவனவாகவும்தான் இருக்கும்.

ஆகவே, ஆலயம் சென்று இறைவனைத் தியானித்துத் துதி பாடுபவரும், நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல், தீயொழுக்கத்தைக் கடைப்பிடித்தாரென்றால், இவருடைய ஒழுக்கக் கேட்டைக் காணும் மக்கள், இவரைப் பழித்து இகழ்ந்து, இவருடைய பொய்யான பக்தியை ஏளனம் செய்வார்கள்.

தீயொழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்துள்ள இவர், தீய ஒழுக்கத்தில் சென்று மனம் அறிய குற்றச் செயல்களைச் செய்துள்ளதால், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மறு உலகில் நரகத்திலோ பேயாகவோ மிருகமாகவோ பிறந்து துன்புறுவார்.

ஆகவே, ஆலயம் சென்று இறைவனைத் தியானித்துத் துதி பாடுபவரும் நன்னெறி ஒழுக்கத்தால் தம்மை அடக்கி ஆளாமல், தீய ஒழுக்கத்தில் சென்று, மனம் அறியக் குற்றச் செயல்களைச் செய்தாரென்றால், இங்கும் இகழப் பட்டு, அடுத்த உலகிலும் துன்புறுவார். ஈருலகிலும் இவருக்கு இழப்பு. இவருடைய பொய்யான பக்தி, இவரை நிந்தனையிலிருந்தும் நரகத்திலிருந்தும் காப்பதில்லை.

ஆனால், ஆலயம் சென்று இறைவனைத் தியானிக்கும் ஒருவர், நன்னெறி ஒழுக்கத்தால் தம்மை அடக்கியாண்டு, தீய ஒழுக்கத்தில் செல்லாமல், நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தாரென்றால், இவருடைய நல்ல ஒழுக்கத்தைக் காணும் மக்கள், இவரைப் புகழ்வதோடு மட்டுமின்றி, இவருடைய மெய்யான பக்தியையும் பாராட்டுவார்கள்.

நன்னெறி ஒழுக்கத்தால் தன்னை அடக்கியாண்டு, நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துள்ள இவர், நல்வழியில் நடந்து, நற்கருமங்களைச் செய்துள்ளதால், உடலை விட்டு உயிர் பிரிந்த பின் தெய்வலோகச் சிறப்பைப் பெறுவார். இவருக்கு ஈருலகிலும் புகழ். ஈருலகிலும் இவர் பெற்ற புகழ், இவர் ஆலயம் சென்று இறைவனைத் தியானித்ததால் மட்டுமல்ல; இவர் தர்ம சீலங்களையும் கடைப் பிடித்து வந்துள்ளதால்தான்.

மற்றும் ஒருவர், ஆலயம் போய் இறைவனைத் தியானிக்காத போதிலும், நன்னெறி ஒழுக்கத்தால் தன்னை அடக்கியாண்டு, தீய ஒழுக்கத்தில் செல்லாமல், நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நற்கருமங்களைச் செய்து வந்தாரென்றால், இவருடைய நல்லொழுக்கத்தைக் காணும் மக்கள், இவரைப் புகழ்ந்து, மதித்து மரியாதை  செய்வார்கள்.

நல்லொழுக்கத்தைக் கடைப் பிடித்து வந்துள்ள இவர், ஆலயம் சென்று இறைவனைத் தியானிக்காத போதிலும்; தெய்வலோகத்திற்குப் போகும் பாதையில் அடியெடுத்து நடந்துள்ளார் என்பதால்; அறவழியில் நடந்துள்ளார் என்பதால்; உடலை விட்டு உயிர் பிரிந்த பின் இவர் தெய்வலோகத்தில் பிறந்து சுகம் பெறுவார். இவருக்கு ஈருலகிலும் புகழ்,

ஆகவே, நன்னெறி ஒழுக்கம் ஒன்றே இவ்வுலக வாழ்வில் மேன்மையும் புகழும்; மறு உலகில் தெய்வலோக சிறப்பையும் தரும். தீயொழுக்கத்தில் சென்று பாவ கருமங்களைச் செய்யும் சிறுமைக் குணமுள்ள ஒருவர், ஆலயம் சென்று இறைவனைத் தியானித்த போதிலும், இவருடைய பக்தி பொய்யான பக்தியே.

திருவள்ளுவர் இதனையே இவ்வாறு கூறியுள்ளார்:

***அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை***
***மறத்தலின் ஊங்கில்லை கேடு*** ***(திருக்குறள்)***

(விளக்கம்: அறநெறிகளை அறிந்து, நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, நற்கருமங்களைச் செய்வதால் ஏற்படும் மேன்மையும் புகழும் வேறு எதிலும் இல்லை. அறநெறிகளை அறியாமல், தீய ஒழுக்கத்தில் சென்று, குற்றச் செயல்களைச் செய்வதால் ஏற்படும் கேடு வேறு எதிலும் இல்லை.)

பகவான் புத்தரும் இதனையே இவ்வாறு கூறியுள்ளார்:

*விழித்தெழுக! கருத்தில்லாமல் இருக்க வேண்டாம்.*
*நன்னெறி ஒழுக்கத்தைக் கடைப்பிடி.*
*நன்னெறியில் நடப்பவனுக்கு இங்கும் சுகம்,*
*அடுத்த உலகிலும் சுகம்.*

*நன்னெறி ஒழுக்கத்தில் நடப்பாயாக;*
*தீயொழுக்கத்தில் செல்ல வேண்டாம்.*
*நன்னெறியில் நடப்பவனுக்கு இங்கும் சுகம்,*
*அடுத்த உலகிலும் சுகம்.*

ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடித் தியானித்த போதிலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்த போதிலும்; நன்னெறி ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல், தீயொழுக்கத்தைக் கடைப்பிடிப்போரின் பக்தி

பொய்யான பக்தி என்றும்; இறைவன் இவர்களிடமிருந்து வெகு தூரத்தில்தான் இருப்பார் என்றும்; இவர்கள் இறைவனின் அன்புக்குரியவர்கள் அல்ல என்றும்; இவர்கள் இறைவனை அடைய முடியாது என்றும் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

ஆனால் மற்றும் ஒருவர், ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடி தியானிக்காத போதிலும், சடங்கு சம்பிரதாயங்கள் செய்யாத போதிலும்; அறநெறிகளை அறிந்து, நன்னெறி ஒழுக்கத்தால் தம்மை அடக்கி ஆண்டு, தீயுழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல், நல்லொழுக்கத்தைக் கடைப்படித்தாரென்றால், இவரே உள்ளத்தில் பக்தி உள்ளவரென்றும்; இறைவன் இவர் அருகிலேயே இருப்பார் என்றும்; இவர் இறைவனின் அன்புக்குரியவர் என்றும்; இவரே இறைவனை அடைவார் என்றும் பகவான்  புத்தர் கூறியுள்ளார்.

*"ஒரு பிட்சு, நான் அணிந்திருக்கும் காஷாய ஆடையைப் பற்றிக் கொண்டு, அடிக்கு அடி அடியெடுத்து என் பின்னாலேயே நடந்து வந்த போதிலும்; அவர் உள்ளத்தில் பேராசையும், பிறர் பொருளைக் கொள்ளக் கருதலும், தீய எண்ணங்களும், சிறுமைக் குணமும் உண்டென்றால்; அவரிடம் அடக்கமும், மனக் கட்டுப்பாடும், புலனடக்கமும் இல்லை என்றால்; அவர் என்னிடமிருந்து வெகுதூரத்தில் இருக்கிறார்; நான் அவரிடமிருந்து வெகு தூரத்தில் இருக்கிறேன். இதற்கான காரணம் என்ன? அவர் அறநெறிகளைக் காணாதவர் (அறியாதவர்); அறநெறிகளைக் காணாத அவர், என்னைக் காண முடியாது.*

*மற்றும் ஒருவர், என்னிடமிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த போதிலும்; அவர் உள்ளத்தில் பேராசையும், பிறர் பொருளைக் கொள்ளக் கருதலும், தீய எண்ணங்களும், சிறுமைக் குணமும் இல்லை என்றால், அவரிடம் அடக்கமும், மனக்கட்டுப்பாடும், புலனடக்கமும் உண்டென்றால், அவர் என் அருகிலேயே இருக்கிறார்; நான் அவர் அருகிலேயே இருக்கிறேன். இதற்கான காரணம் என்ன? அவர் அறநெறிகளைக் காண்பவர்(அறிந்தவர்); அறநெறிகளைக் காணும்*

*அவர், என்னைக் காண்பார்."*

ஆகவே, இவ்வுலக வாழ்விலும், உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் அடுத்த உலகிலும் சுகம் பெற விரும்பி, ஆலயம் சென்று இறைவனைத் துதி பாடி தியானிப்போர், பகவான் புத்தரின் வார்த்தைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கற்று, அறநெறிகளை அறிந்து; தீயொழுக்கத்தில் செல்லாமல் தன்னைக் கவனமாய்க் காத்து; நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து, குற்றமில்லாக் கருமங்களைச் செய்து நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும். அப்போதுதான் இவர் விரும்பிய சுகத்தை ஈருலகிலும் பெறலாம்.

சான்றோர் அருளியுள்ள தர்ம உபதேசங்களைக் கற்காமல், அறநெறிகளை அறியாமல், தீயொழுக்கத்தில் சென்று குற்றச் செயல்களைச் செய்யும் ஒருவர், ஆலயம் சென்று இறைவனைத் துதிபாடி தியானித்த போதிலும்; புண்ணியத் தலங்களுக்குச் சென்று புனித நீராடித் தன் பாவங்களைக் கழுவிய போதிலும்; இவருக்கு ஈருலகிலும் புகழ் இல்லை.

இவர் தீயொழுக்கத்தில் சென்றுள்ளதால், இவருடைய ஆலய வழிபாடு இவரை நிந்தனையிலிருந்தும், நரகத்திலிருந்தும் காப்பதில்லை. இவருடைய பக்தி பொய்யான பக்தி.

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 5.1 புரோகிதர் தோதையா.

தோதையா என்பவர் ஒரு பிராமணப் புரோகிதர் (மதகுரு). இவர் பகவான் புத்தர் காலத்தில் வாழ்ந்தவர். அவ்வூர் மன்னனுக்கு இவர் மதகுருவாக இருந்தவர்.

தோதையா வேதங்களை முழுமையாகக் கற்றவர்; மந்திரங்களையும் அவற்றை ஓதும் முறைகளையும் அறிந்தவர்; ஹோமம் வளர்த்து மந்திரங்களை ஓதி, கிரியைகள் செய்வதிலும்; வேதங்களை விளக்கிக் கூறுவதிலும் இவருக்கு நிகர் அவ்வூரில் வேறு எவரும் இல்லை என அவ்வூர் பிராமணர்கள் கருதினார்கள்.

இவர் ஒரு செல்வந்தர். ஆனால் ஆணவக்காரர்; கர்வம் மிகுந்தவர்; கோபக்காரர். தம் கருத்தே சிறந்தது என வெகுண்டெழுந்து விவாதிப்பவர். தான் எனும் அகந்தையில் தன்னை உயர்த்தியும், பிறரைத் தாழ்த்தியும் பேசுபவர். சினம் கொண்டு, பகை பாராட்டி, பிறரை இகழ்ந்து நிந்தனை செய்பவர். உள்ளத்தில் அன்பும் அனுதாபமும் இல்லாதவர். செல்வச் செருக்கில் பிறரை அலட்சியப் படுத்துபவர்.

இவர் புரோகிதர் என்ற போதிலும், செருக்கும் சினமும் சிறுமைக் குணமும் இவரை இழிவானவராக்கியது. வேதங்களைக் கற்றுள்ளதனாலும், மந்திரங்களை ஓதி கிரியைகளைச் செய்து வந்ததனாலும், தம்மைப் 'பக்தன் என எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தார் புரோகிதர் தோதையா.

செல்வச் செருக்கில், 'பக்தன்' என்ற மமதையில், பிறரை மதியாமல் வாழ்ந்த புரோகிதர் தோதையாவின் வாழ்வை ஒருநாள் மரணம் துண்டித்தது. இவர் இறந்த பின் , இவருடைய மகன் சுபா ஈமச் சடங்குகளைச் செய்து, தந்தையின் சடலத்தை அடக்கம் செய்தார். பிறகு குடும்பத்தைப் பொறுப்பேற்றுப் பராமரித்து வந்தார்.

இறந்துவிட்ட புரோகிதர் தோதையா, மறுபிறப்பில் தம் வீட்டிலேயே நாயாகப் பிறந்தார். அந்த நாய் வளர்ந்து பெரியதானதும், வீட்டிற்கு வருவோரை எல்லாம் கண்டு, குரோதத்துடன் பலமாகக் குரைக்கும். வீட்டிற்குச் சொந்தக்காரரான சுபா, வீட்டிற்கு வருவோரை நாய் கடித்துவிடுமோ என அஞ்சி, அதை ஒரு கம்பத்தில் கட்டி வைத்திருந்தார்.

ஒருமுறை பகவான் புத்தர் அந்த வீட்டிற்குச் சென்றார். சுபா பகவான் புத்தரை வணங்கி, அன்புடன் வரவேற்றார். ஆனால், கட்டிப் போடப்பட்டிருந்த நாய் பகவான் புத்தரைக் கண்டதும் , சினம் கொண்டு

குரோதத்துடன் பலமாகக் குரைத்தது.

சினம் கொண்டு குரோதத்துடன் குரைக்கும் நாயின் முந்திய பிறப்பை அறிந்த பகவான், இலேசாகப் புன்னகை செய்தார். பிறகு சுபாவிடம் அந்த நாய் முற்பிறப்பில் அந்த வீட்டின் சொந்தக்காரர் என்றும், சுபாவின் தந்தை புரோகிதர் தோதையா என்றும் கூறினார். மனிதர்கள் தம் செயல்களுக்குத் தாமே வாரிசு என்றும், ஒரு மனிதனின் அடுத்த உலகக் கதியை அவனுடைய எண்ணங்களும், செயல்களும்தான் நிர்ணயிக்கும் என்றும் சுபாவிற்கு உபதேசம் செய்துவிட்டுச் சென்றார்.

பிராமணர் தோதையா, வேதங்களைக் கற்று, மந்திரங்களை ஓதி கிரியைகள் செய்து, தம்மைப் 'பக்தன்' எனக் கருதி மமதையுடன் வாழ்ந்தவர். அடுத்த உலகில் தமக்கு நல்ல கதி உண்டு என்று இறுமாப்புடன் இருந்தவர்.

ஆனால் உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், மறுபிறப்பில் இவர் நல்ல கதிக்குப் போகவில்லை. தீய கதிக்கு ஆளாகி, நாயாகப் பிறந்தார். ஏன்?

இவரிடம் செருக்கும் சினமும் சிறுமைக் குணமும் இருந்ததால், அதன் காரணமாக இவர் ஒழுக்கக் கேட்டில் சென்று, தீமையான எண்ணங்களை எண்ணி, தகாத சொற்களைப் பேசி, தகாத செயல்களைச் செய்து தீய கதியை அடைந்தார்.

***செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்***
***பெருக்கம் பெருமித நீர்த்து*** - *திருக்குறள்*

(விளக்கம்: அகங்காரம், கோபம், மற்றும் ஒழுக்கம் கெட்டு ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்பும் சிறுமைக் குணம் ஆகிய இம்மூன்று குற்றங்களும் தம்மிடம் இல்லாது எவர் காத்துக் கொள்கிறாரோ, அவர் மேன்மை அடைந்து பலராலும் போற்றப்படுவார்.)

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 5.2 மது அருந்திய பெண்களின் கதை.

பகவான் புத்தர் காலத்தில் இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் வாழ்ந்த அனாத பிண்டகர் என்பவர், பகவான் புத்தருக்கு அங்கு ஒரு மடம் அமைத்துக் கொடுத்தார். ஒரு சமயம் பகவான் புத்தர் அந்த மடத்தில் தங்கி இருந்தார். அப்போது நடந்த சம்பவம் இது:

அக்காலத்தில் சவத்திப் பட்டணத்தில் விசாகை என்று ஒரு சீமாட்டி வாழ்ந்து வந்தாள். இவள் பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டவள். இவள் அறவழியில் நடந்து, நற்பண்புகளுடனும் நற்குணத்துடனும் நல்வாழ்வு வாழ்ந்து வந்தாள்.

விசாகையின் நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும், பக்தியையும் கண்ணுற்ற சிலர் தம் சொற்கேளாத மனைவிகளை விசாகையிடம் அழைத்துச் சென்று, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். இந்த மனைவிமார்களில் சிலருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது. இது விசாகைக்குத் தெரியாது.

விசாகையும் அந்தப் பெண்களுக்கு நல்லொழுக்க நெறிகளை விளக்கி, நல்லுபதேசம் செய்து வந்தாள். இடையிடையே அந்தப் பெண்களை மடத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களுக்குத் தர்மத்தை உபதேசம் செய்யுமாறு பகவான் புத்தரிடம் கேட்டுக் கொள்வாள். பகவான் புத்தரும் அந்தப் பெண்களுக்குத் தர்மத்தை உபதேசம் செய்வார்.

ஆனால், அந்தப் பெண்களுக்குத் தர்ம உபதேசத்தில் நம்பிக்கை எழவில்லை. அதன் காரணமாக அந்தப் பெண்கள் தர்ம உபதேசத்தில் கவனம் செலுத்துவதில்லை. மடத்தை விட்டு வெளியே வந்ததும், செவியுற்ற தர்ம உபதேசங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு, பழைய கொள்கைகளையே பின்பற்றுவார்கள்.

ஒரு விடுமுறை நாள் அன்று, இந்தப் பெண்கள் விசாகையை அணுகி, அப்பட்டணத்துப் பூங்காவிற்குப் போய் உல்லாசமாகப்

பொழுதைக் கழிக்கலாம் எனக் கேட்டுக் கொண்டார்கள். விசாகையும் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி, அவர்களுடன் பூங்காவிற்குச் சென்றாள்.

இந்தப் பெண்களில் சிலர், ஜாடிகளில் மதுவை ஊற்றி, அவற்றைத் தம் ஆடைகளில் மறைத்து எடுத்துச் சென்றனர். பூங்காவனத்தை அடைந்ததும், கொண்டு வந்த மதுவை இரகசியமாக அருந்திவிட்டு, போதையில் பூங்காவில் இங்குமங்கும் அலைந்து திரிந்தார்கள்.

இதைக் கண்ட விசாகை அவர்களிடம், "தோழிகளே, இது முறையல்ல. நீங்கள் ஒழுக்கம் தவறி நடக்கிறீர்கள். உங்கள் ஒழுக்கக் கேட்டால் எனக்கும் பழி உண்டாகும். இதை அறிந்தால் உங்கள் கணவன் மார்கள் உங்கள் மீது சினம் கொள்வார்கள்," எனக் கண்டித்து அவர்களுக்கு அறிவுரை கூறினாள்.

மற்றும் ஒரு விடுமுறை நாளன்று, இந்தப் பெண்கள் மீண்டும் மது அருந்த விரும்பி, விசாகையை அணுகி, பூங்காவிற்குப் போய் பொழுதை உல்லாசமாகக் கழிக்கலாம் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

“முன்பு நான் உங்களோடு வந்தபோது, உங்களுடைய ஒழுக்கக் கேட்டால் எனக்கு அவமானத்தை ஏற்படுத்தினீர்கள். நீங்களே செல்லுங்கள்," எனக் கூறி, அவர்களுடன் போக மறுத்துவிட்டாள்.

"இந்தத் தடவை, முன்பு போல் நாங்கள் மது அருந்தி ஒழுக்கம் கெட்டு நடந்து கொள்ள மாட்டோம். இன்று, மடத்திற்குச் சென்று பகவான் புத்தரை வணங்கி, மரியாதை தெரிவிக்கலாம்," என அந்தப் பெண்கள் கூறினார்கள். இதைக் கேட்ட விசாகை மனமகிழ்ந்து, “அப்படியாயின், வீட்டிற்குப் போய் சீக்கிரம் உங்கள் வேலைகளைச் செய்துவிட்டு வாருங்கள். நாம் எல்லாரும் மடத்திற்குப் போகலாம்," எனக் கூறினாள்.

வீட்டிற்குச் சென்ற இந்தப் பெண்கள், ஜாடிகளில் மதுவை ஊற்றி, தம் ஆடைகளுக்குப் பின்னால் அவற்றை மறைத்துக் கொண்டு வந்து, விசாகையுடனும் மற்றப் பெண்களுடனும் மடத்திற்குச் சென்றார்கள்.

மடத்தை அடைந்ததும், மதுவை மறைத்துக் கொண்டு வந்த இந்தப் பெண்கள், மற்றவர்களிடமிருந்து பிரிந்து சென்று, இரகசியமாக மதுவை அருந்தினார்கள். மதுவை அருந்திய பின், ஜாடிகளை எறிந்துவிட்டு, மீண்டும் மற்றவர்களோடு வந்து சேர்ந்து கொண்டார்கள்.

எல்லாரும் மடத்தினுள் சென்று பகவான் புத்தர் முன் அமர்ந்தார்கள். விசாகை பகவான் புத்தரிடம், "பகவான், இந்தப் பெண்களுக்குத் தர்மத்தை உபதேசம் செய்யுங்கள்," எனக் கேட்டுக் கொண்டாள். மது அருந்திய பெண்களின் உடல்கள் மயக்கத்தில் அசைந்தாடின.

அதைக் கண்ணுற்ற மாறன், "இவர்களை ஆட்கொண்டு, கௌதமரின் முன் இவர்களை மரியாதையின்றி நடக்கச் செய்வோம்," என எண்ணி, அப்பெண்களை ஆட்கொண்டான்.

(விளக்கம்: மாறன் - சன்மார்க்க விரோதி; சைத்தானைப் போன்றவன்; தர்ம போதனையை வெறுப்பவன்; இங்கு மாறன் என்பதற்கு "சைத்தானின் வழியில் செல்லும் ஒரு தீய ஆவி" எனப் பொருள் கொள்ளலாம்.)

உடனே, இந்தப் பெண்கள், எழுந்து, உடலைப் பல கோணங்களில் வளைத்தும் நெளித்தும் இங்குமங்கும் குதித்தும், கைகளைத் தட்டியும், சிரித்துப் பாடி ஆடினார்கள். இந்தப் பெண்களின் வெட்கமில்லாத நடத்தைக்கு மாறன்தான் காரணம் என அறிந்த பகவான் புத்தர், "மாறனுக்கு வாய்ப்பளிக்கக் கூடாது," என எண்ணி, தம் புருவத்திலிருந்து கருமையான, நீல நிற ஒளிக்கதிரை அனுப்பினார். உடனே அவ்விடம் கருமையான இருள் சூழ்ந்ததுபோல் ஆகிவிட்டது.

திடீரெனச் சூழ்ந்த இருளில், அப்பெண்களை அச்சம் பற்றிக் கொண்டது. மயக்கமும் தெளிந்தது. பிறகு பகவான் புத்தர் தாம் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து மறைந்து வானத்தில் தோன்றினார். வானத்தில் இருந்தவாறே, ஆயிரம் நிலவுகள் பிரகாசிப்பது போல, தம் புருவத்திலிருந்து பிரகாசமான ஒளியை அனுப்பினார். அதன் பின் அந்தப்

பெண்களுக்கு அறிவுரை கூறினார்.

*"என்னைக் காண வரும்பொழுது, உங்களிடம் நிதானமும் கவனமும் இருக்க வேண்டும். உங்களுடைய அஜாக்கிரதை காரணமாக மாறன் உங்களை ஆட்கொண்டான். எங்கு நீங்கள் தவறாக நடந்து கொள்ளக் கூடாதோ, அங்கு உங்களைத் தவறாக நடக்கச் செய்தான்.*

*இனிமேல் பேரவா எனும் தீயை அணைக்கவும், தீய உணர்ச்சிகளை அடக்கவும் முயலுங்கள்," எனக் கூறி இப்படியும் கூறினார்:*

*இந்த உலகம் எப்பொழுதும் எரிந்து கொண்டேயிருக்கையில்,*

*இங்கே என்ன சிரிப்பு? இங்கே என்ன களியாட்டம்?*

*இருளால் மூடப்பட்டிருக்கும் நீங்கள்*

*ஏன் ஒளியைத் தேடுவதில்லை?*

இதைக் கேட்ட அந்தப் பெண்களுக்கு, தர்ம உபதேசத்தில் உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது. இது நாள் வரை தர்ம உபதேசத்தை ஒரு பொருட்டாகக் கருதாத அவர்கள்; இது நாள் வரை தர்ம உபதேசத்தை அலட்சியமாக எண்ணி வந்த அவர்கள்; அதன் காரணமாகத் தங்களுடைய ஒழுக்கக் கேட்டையும், தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தையும் எண்ணி வருந்தினார்கள்,

இவர்கள் உள்ளத்தில் தர்ம உபதேசத்தில் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என அறிந்த பகவான் புத்தர், மீண்டும் தம் இருக்கைக்குத் திரும்பினார்.

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 6. தவ வேடம்.

சிலர், தம் உள்ளத்தில் உள்ள அழுக்கைக் கழுவக் கருதாமல், பக்தியில் மாண்பு பெற்றுவிட்ட பக்தர்களைப்போல் வேடமிட்டு, மக்களை ஏமாற்றுவார்கள். அகத்தே இவர்கள் உள்ளம் மாசுபட்டிருக்கும். புறத்தே இவர்கள் தலையை மொட்டையடித்துக் கொண்டும், தலையில் நீண்ட முடியை வளர்த்துக் கொண்டும், காஷாய ஆடை அணிந்து கொண்டும், கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்து கொண்டும், மற்றும் பலவாறான புறத்தோற்றங்களாலும் மாண்பு பெற்றுவிட்ட பக்தர்களைப் போல் வேடமிட்டு மக்களிடையே நடமாடுவார்கள்.

இவர்கள், பலர் காண ஆலயம் போவார்கள்; இறைவனைத் துதி பாடி பஜனை செய்வார்கள்; ஹோமம் வளர்த்து மந்திரங்கள் ஓதி, கிரியைகள் செய்வார்கள்; புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போவார்கள்; புனித நீராடுவார்கள்; தர்ம சாத்திரங்களைப் பிரசங்கம் செய்வார்கள். இவை யாவற்றையும் காணும் மக்கள், இவர்களைப் புனிதமானவர்கள் என எண்ணி, மரியாதை செய்து வணங்கி, இவர்களிடம் பக்தி கொள்வார்கள்.

தர்ம சாத்திரங்களைக் கற்று, தவமிருந்து பல அற்புத சக்திகளைப் பெற்றுள்ளதாகவும்; தம் தவ வலிமையினால் மக்களின் பிணிகளையும் துன்பங்களையும் போக்க முடியும் என்று கூறி, பல விசித்திரமான சடங்குகளைச் செய்து, பசப்பு வார்த்தைகளைப் பேசி, கபடத்தாலும் வஞ்சனையாலும் இவர்கள் மக்களை ஏமாற்றுவார்கள்.

புறத்தே வான் போல் உயர்ந்த பக்தர்களைப் போல் இவர்கள் நடந்து கொண்ட போதிலும், அகத்தே இவர்கள் உள்ளம் மாசு பட்டிருக்கும். நன்னெறி ஒழுக்கத்தில் உறுதியாக நிற்கும் மனவலிமை இவர்களுக்கு இருக்காது. தீயொழுக்கத்தில் கிடைக்கும் இன்பத்திலும் பொருளிலும் மயங்கி, ஒழுக்கம் கெட்டு, இரகசியமாகக் குற்றச் செயல்களைச் செய்யும் சிறுமைக் குணம் இவர்களிடம் இருக்கும்.

ஒழுக்கம் கெட்டு, இரகசியமாகக் குற்றம் செய்யும் இவர்கள், "என் குற்றங்களைப் பிறர் அறிய வேண்டாம் " என எண்ணி, பொய்யாலும் கபடத்தாலும் வஞ்சனையாலும் தம் குற்றங்களை மறைத்து, பக்தியில் நிறைவு பெற்றுவிட்ட பக்தர்களைப் போல் மக்கள் மத்தியில் நடமாடுவார்கள்; புனிதமானவர்கள் போல் நடிப்பார்கள்.

இவர்களுடைய ஒழுக்கக் கேட்டைப் பிறர் அறிய வரும்போது, இவர்களைத் தூற்றி, இகழ்ந்து, பழித்து நிந்தனை செய்வார்கள். இவர்கள் தவக்கோலத்திற்குப் பின் மறைந்து கொண்டு பாவ கருமங்களைச் செய்துள்ளதால், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மறு உலகிலும் திய கதிக்குப் போவார்கள்.

இவர்களுடைய பக்தி பொய்யான பக்தி என்றும்; இவர்களுடைய தவக்கோலம் வெறும் வேடம் என்றும்; இதனால் பயனில்லை என்றும்; இறைவன் இவர்களிடமிருந்து வெகு தூரத்தில்தான் இருப்பார் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

***வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்***
***தான் அறி குற்றப் படின்*** *-(திருக்குறள்)*

(விளக்கம்: குற்றம் என அறிந்தும், தீயொழுக்கத்தில் ஒருவனின் மனம் இன்பத்தை நாடுமாயின், வான் போல உயர்ந்த தவ வேடம் என்ன பயனைச் செய்யும்? அதனால் பயன் இல்லை.)

***மனத்தது மாசு ஆக மாண்டார்நீர் ஆடி***
***மறைந்து ஒழுகும் மாந்தர் பலர்*** *-(திருக்குறள்)*

(விளக்கம்: உள்ளத்தில் அழுக்கிருக்க, அதைத் தூய்மைப் படுத்தக் கருதாமல்; தவத்தால் மாண்பு பெற்றவர் போல் நடித்து, தம் தீயொழுக்கத்தை மறைத்து வஞ்சனை செய்யும் மாந்தர்களும் இந்த உலகில் பலர் உள்ளனர்.)

எவராலும் தம் பாவங்களை மறைக்க முடியாது. மறைக்கும் இடம்

எங்குமில்லை. பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் இடமும் எங்கும் இல்லை. பிறரிடம் இருந்து தம் பாவ கருமங்களை மிகத் திறமையாக மறைத்து வஞ்ச மனத்துடன் நல்லவன் போல் ஒருவன் நடித்தாலும், அவன் பாவங்களை அவன் மனமே அறியும். அவன் மனமே அவன் செய்த பாவங்களுக்குச் சாட்சி.

திருவள்ளுவர் இதையே இவ்வாறு கூறியுள்ளார்:

***வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்***
***ஐந்தும் அகத்தே நகும்*** -*(திருக்குறள்)*

(விளக்கம்: அறநெறி ஒழுக்கம் இல்லாதவன், "என் பாவங்களைப் பிறர் அறிய வேண்டாம்" என எண்ணி, தன் பாவங்களை மறைத்து, ஒழுக்கமுடையவன் போல் நடிப்பதைக் கண்டு, அவன் உடலோடு கலந்து நிற்கின்ற பஞ்ச பூதங்களும் நகைக்கும்.)

இவன் மனமே இவன் செய்துள்ள பாவங்களுக்குச் சாட்சியாகையால், எங்கு இவன் தன் பாவங்களை மறைக்க முடியும்? இவன் செய்த பாவங்களை இவன் மனமும் அறியும்; பக்தனைப் போல் வேடமிட்டு, மன சாட்சி இல்லாமல் பாவங்கள் செய்யும் மடையனின் கோணல் பாதையை இறைவனும் அறிவார்.

இத்தகையோர் உடலை விட்டு உயிர் பிரிந்த பின், நரகத்திற்குள் விழுவார்கள் என பகவான் புத்தர் கூறியுள்ளார்.

*காஷாய ஆடை தரித்தவர்களிலும், தம்மை அடக்கிக் கொள்ளாமல், பாவ கருமங்களைச் செய்வோர் பலர் இருக்கின்றனர். இத்தகையோர், தங்களுடைய பாவ செயலால் நரகத்தை அடைகின்றனர்.*

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 6.1 கபட சந்நியாசியின் கதை.

தவத்தால் மாண்பு பெற்றவர் போல வேடமிட்டு வஞ்சனை செய்வோர் இவ்வுலக வாழ்விலும் நிந்திக்கப்பட்டு, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மறு உலகிலும் தண்டிக்கப்படுவர் என்பதை விளக்கி, பகவான் புத்தர் இக்கதையைக் கூறியுள்ளார்.

முன்னொரு காலத்தில் காசி நகருக்கு அருகில் ஒரு கிராமம் இருந்தது. ஒரு நாள் அந்தக் கிராமத்திற்கு கபட சந்நியாசி ஒருவன் வந்தான். நீண்ட குடுமியோடும், கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்து, தவத்தால் மாண்பு பெற்றவனைப் போல், அவன் அந்தக் கிராமத்திற்கு வந்தான். அவன் தோற்றத்தைக் கண்டு, புனிதமானவன் என நம்பி, அவனை வணங்கி மரியாதை செய்தனர் அக்கிராமத்து மக்கள்.

"யாம் வேதங்களைக் கற்று, தர்ம சாஸ்திரங்களைக் கற்று, பல ஆண்டுகள் இமயமலையில் தவம் செய்து, பல அற்புத சக்திகளைப் பெற்றுள்ளோம். மக்களுக்குத் தர்ம நீதிகளை விளக்கி, துன்பங்களைப் போக்கக் கருதி, இமய மலையில் இருந்து இறங்கி இங்கு வந்துள்ளோம்," என அவன் அந்தக் கிராமத்து மக்களிடம் கூறிக்கொண்டான். அதைக் கேட்ட அக்கிராமத்து மக்கள், அவனிடம் பயமும் பக்தியும் நம்பிக்கையும் கொண்டு, அவனுக்கு மரியாதையுடன் பணிவிடை செய்து வந்தனர்.

அவனுடைய புறக்கோலத்தையும் கபட வார்த்தைகளையும் உண்மை என நம்பி, அவனிடம் பக்தி கொண்டவர்களில், அக்கிராமத்து ஜமீன்தாரும் ஒருவராவார். அவன் தவத்தால் மாண்பு பெற்றவன் என நம்பிய ஜமீன்தார், கிராமத்திற்கு அருகில் அவனுக்கு ஓர் ஆசிரமம் அமைத்துக் கொடுத்து, தம் வீட்டிலிருந்து உணவும் அனுப்பி வந்தார்.

அவ்வட்டாரத்தில் ஒரு திருடர் கும்பல், மிகச் சாமர்த்தியமாக மக்களின் வீடுகளில் நுழைந்து, கொள்ளையிட்டு வந்தனர். தம் வீட்டிலும் அந்தத் திருடர் கும்பல் புகுந்து கொள்ளையிட்டு விடுவார்களோ என்ற அச்சம் ஜமீன்தாரை வருத்தியது.

"நம்மிடமுள்ள தங்கத்தில் ஒரு பகுதியை ஆசிரமத்தின் ஓர் இடத்தில் புதைத்து வைப்போமே! அப்படியே திருடர்கள் நம் வீட்டில் புகுந்து கொள்ளையிட்டாலும், தங்கம் ஆசிரமத்தில் பத்திரமாக ஒரு சேமிப்பாக இருக்குமே!" என ஜமீன்தார் எண்ணினார்.

ஒரு நாள் நூறு தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு ஜமீன்தார் ஆசிரமத்திற்குச் சென்றார். சந்நியாசியிடம் தம் அச்சத்தை விளக்கி, அவன் சம்மதத்துடன் தங்க நாணயங்களை ஆசிரமத்தின் ஓர் இடத்தில் புதைத்து வைத்தார்.

"நாங்கள் உலகைத் துறந்தவர்கள். பற்றுகளை அறுத்தவர்கள். எல்லா ஆசைகளையும் அழித்துவிட்டவர்கள். நாங்கள் பிறர் பொருளைக் கொள்ளக் கருதுவதில்லை. உங்கள் செல்வம் இங்கு பாதுகாப்புடன் இருக்கும்," என ஜமீன்தாருக்கு தைரியம் கூறி அவரை அனுப்பி வைத்தான் சந்நியாசி.

ஜமீன்தார் சென்றபின், "இந்தத் தங்கம், நாம் வாழ்நாள் முழுதும் சௌகரியமாக வாழ்வதற்குப் போதுமானது," என எண்ணிய கபட சந்நியாசி, அதை அபகரிக்கத் திட்டமிடலானான்.

சில நாள்கள் கழித்து, தங்க நாணயங்களைத் தோண்டியெடுத்துச் சென்று, சற்றுத் தூரத்தில் இரகசியமாகப் புதைத்து வைத்தான். மறுநாள் கபட சந்நியாசி ஜமீன்தாரின் வீட்டிற்குச் சென்றான். ஜமீன்தார் அவனை வரவேற்று உபசரித்து உணவளித்தார்.

உண்டபின், "யாம் இங்கு அதிக நாள்கள் தங்கிவிட்டோம். அதிக நாள்கள் ஒரே இடத்தில் தங்குவது உலக வாழ்விற்குச் சமமாகும்; எங்களைப்போல் முற்றும் துறந்தோருக்கு இது பொருந்தாது. ஊர் ஊராகச் சென்று மக்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்காகத்தான் யாம் இமய மலையிலிருந்து இறங்கி வந்துள்ளோம். ஆகவே, யாம் மற்ற ஊர்களுக்கும் போக வேண்டும். தங்களுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் நன்றி கூறிவிட்டுப் போகவே யாம் தங்களைக் காண வந்தோம்," என ஜமீன்தாரிடம் கபட சந்நியாசி கூறினான்.

ஜமீன்தார் எவ்வளவோ மன்றாடித் தடுத்தும், அவன் தன் உறுதியிலிருந்து மாறவில்லை. ஒரு புனித ஆத்மா நம்மிடமிருந்து பிரிந்து செல்கிறாரே! என்ற கவலையுடன், ஜமீன்தார் அவனுடன் கிராமத்தின் எல்லை வரை சென்று வழியனுப்பி வைத்தார்.

சிறிது தூரம் சென்றதும், அந்த கபட சந்நியாசி ஒரு துரும்பை எடுத்துத் தன் தலை முடியில் வைத்துக் கொண்டு, திரும்பி வந்தான். கவலையோடு வீட்டிற்கு வந்த ஜமீன்தார், திரும்பி வந்த சந்நியாசியிடம், "ஏன் திரும்பிவிட்டீர்கள்?" எனக் கேட்டார்.

"ஐயனே, எனக்கு உணவளித்த உமது வீட்டிலிருந்த துரும்பு ஒன்று என் தலையில் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டது. அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா? உப்பிட்டவரை உள்ளளவும் நினை எனத் தர்ம சாத்திரங்கள் கூறுகின்றன. முற்றும் துறந்த எம்மைப் போன்றோர், பிறரால் கொடுக்கப்படாத எதையும் எடுப்பதில்லை என்பதால், இந்தத் துரும்பை உம்மிடம் கொடுப்பதற்கே திரும்பி வந்தோம்," எனச் சபல வார்த்தைகளைப் பேசினான் அந்தக் கபட சந்நியாசி.

அதைக் கேட்ட ஜமீன்தார் திகைப்புற்று, " இப்படிப்பட்ட புனித ஆத்மாக்களும் உலகில் உள்ளனரே!" என உள்ளம் நெகிழ்ந்து, கபட சந்நியாசியை வழியனுப்பி வைத்தார். அந்த எத்தன், "நம் கபட வார்த்தைகளை ஜமீன்தார் உண்மை என நம்பிவிட்டார்," என உள்ளம் பூரித்தவனாய், "வேறொரு நாளைக்கு வந்து இரகசியமாய்த் தங்கத்தை எடுத்துச் செல்வோம்," என எண்ணிக் கொண்டு சென்றான்.

சந்நியாசி சென்று சிறிது நேரம் கழித்து, பல ஊர்களில் பயணம் செய்து உலக அறிவு நிரம்பப் பெற்ற வியாபாரி ஒருவர் அக்கிராமத்திற்கு வந்தார். அவர் ஜமீன்தாரைக் காணச் சென்றார். ஜமீன்தார் வியாபாரியிடம் சந்நியாசியைப் பற்றிக் கூறி, ஒரு துரும்பைக் கூட எடுக்காத சந்நியாசியின் புனிதத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்.

உலக அறிவு நிரம்பப் பெற்ற வியாபாரியின் உள்ளத்தில் சந்நியாசியைப் பற்றிய ஐயம் எழுந்தது. இந்த சந்நியாசி கபடத்தால்

ஜமீன்தாரின் பொருளை அபகரித்திருக்க வேண்டும் என எண்ணி,

"சந்நியாசியின் பாதுகாப்பில் ஏதேனும் பொருளை வைத்திருந்தீர்களா?" என ஜமீன்தாரிடம் வினவினார்.

"ஆம், ஆசிரமத்தில் அவருடைய பாதுகாப்பில் சில பொருள்களை வைத்திருந்தேன்.

"உங்கள் பொருள்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று போய்ப் பாருங்கள்."

உடனே, ஜமீன்தார் ஆசிரமத்திற்குச் சென்று, தங்க நாணயங்கள் யாவும் வைத்தவிடத்தில் உள்ளனவா என்று பார்த்தார். அவை அங்கு இல்லாததைக் கண்டு, ஓடி வந்து வியாபாரியிடம் கூறினார்.

"உங்கள் பொருளைத் திருடியவன் வேறு யாருமல்ல, அந்தக் கபட சந்நியாசிதான். அவனுடைய புறக் கோலத்தையும், சபல வார்த்தைகளையும் உண்மை என நம்பிவிட்ட உங்களைக் கபடத்தால் வஞ்சித்து, உங்கள் பொருளை அபகரித்துச் சென்றுவிட்டான். வாருங்கள், அவனைத் துரத்திச் சென்று பிடிப்போம்," எனக் கூறினார்.

இருவரும் சந்நியாசி சென்ற வழியில் துரிதமாகச் சென்று அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

ஜமீன்தார் அவனிடம் நயமாகப் பேசித் தங்கத்தை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் கூறும்படி கேட்டார். ஆனால், அந்த எத்தனோ, மீண்டும் தர்ம சாஸ்திரங்களைப் பற்றிப் பேசி, தன்னைப் போன்ற புனிதமானவர்கள் இது போன்ற பாவச் செயல்களைச் செய்வதில்லை எனக் கூறினான்.

இந்த அயோக்கியனிடம் நயமாகப் பேசிப் பயனில்லை என அறிந்த இருவரும், அவனை அறைந்து, குத்தி, உதைத்தார்கள். வலி தாங்க முடியாமல், தங்கத்தை ஒளித்து வைத்திருக்கும் இடத்தை அவர்களிடம்

காண்பித்தான்.

"ஒரு துரும்பு உன் மனசாட்சியை உறுத்தியது போல , நூறு தங்க நாணயங்கள் உன் மனத்தை உறுத்தவில்லையா?" என அந்த சந்நியாசியைப் பார்த்து வியாபாரி ஏளனமாகக் கேட்டார்.

பிறகு, "இனிமேலாவது நேர்மையாக வாழ்ந்து கொள்," என அவனை எச்சரித்துவிட்டு இருவரும் திரும்பி வந்தனர்.

***நெஞ்சில் துறவார் துறந்தார்ப்போல் வஞ்சித்து***
***வாழ்வாரின் வன்கணார் இல்*** *-(திருக்குறள்)*

(விளக்கம்: மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவரைப் போல் தவவேடமிட்டு, மக்களை வஞ்சித்து வாழ்வாரைப் போன்ற கொடியவர் உலகில் வேறு யாருமில்லை.)

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 6.2 முயலையையும் ஆந்தையையும் பூனை வஞ்சித்த கதை.

(பஞ்ச தந்திரக் கதை)

முதிர்ந்த ஒரு மரத்தின் பொந்தில் ஒரு காகம் வசித்து வந்தது. அதே மரத்திலுள்ள மற்றொரு பொந்தில் கபிஞ்சவன் என்ற ஆந்தையும் வசித்து வந்தது. காகமும் ஆந்தையும் மாலை நேரத்தில் பலவாறாக உரையாடி மகிழ்ந்து பொழுதைப் போக்கி வந்தன.

ஒரு நாள் ஆந்தை இரை தேடி பறந்து சென்றது. வெகு நேரமாகியும் அது திரும்பவேயில்லை. “கபிஞ்சவன் எங்காவது வலையில் அகப்பட்டுக் கொண்டுவிட்டானோ? அல்லது யாராவது அடித்துக் கொன்றுவிட்டார்களோ?" என்றெல்லாம் எண்ணிக் காகம் கவலைப்பட்டது.

மூன்றாம் நாள் கபிஞ்சவனின் பொந்தில் ஒரு முயல் வந்து குடி புகுந்தது. காகம் எவ்வளவோ சொல்லித் தடுத்தும் முயல் கேட்கவில்லை. சில நாள்கள் கழித்து கபிஞ்சவன் திரும்பி வந்தது; தன் பொந்தில் முயல் இருக்கக் கண்டது.

கபிஞ்சவன் முயலிடம், "அடே! நீ யார்? இது என் வீடு. நான் இல்லாத போது என் வீட்டில் நுழைந்துள்ளாயே! உடனே புறப்பட்டுப் போய்விடு," என்று சினந்து கூறியது.

அதைக் கேட்ட முயல், “யார் சொன்னது இது உன் வீடு என்று? இது என் வீடு. வீணாகப் பொய் சொல்லாதே. குளம், கிணறு, கோயில், சத்திரம் இவற்றின் சொந்தம் அவற்றை விட்டு நீங்கின பிறகு இராது. மேலும் ஒருவனுடைய வீட்டைப் பிறனொருவன் பத்து ஆண்டு காலம் யாவரும் அறிய அனுபவித்தால் அவ்வீடு அவனுடையதாகவே ஆகிவிடும். இந்த நியாயம் மனிதர்களிடையே இருக்கிறது. பிராணிகளில் எது வலிமை உடையதோ அது பொருள்களைக் கைக்கொள்ளும். இப்படி தர்ம நியாயம் இருப்பதால் இந்த வீடு என்னுடையதுதான்," என்றது.

உடனே ஆந்தை, "நீ தர்ம நியாயத்தைப் பற்றிப் பேசுகிறாய். அதனால் நீயும் நானும் தர்ம நியாயத்தை அறிந்த நீதி மானிடம் சென்று, வழக்கைச் சொல்லி நியாயம் கேட்போம். அவர் யாரை இந்த வீட்டில் இருக்கச் சொல்கிறாரோ அதன்படி நடப்போம்," என்றது.

அதற்கு முயலும் உடன்பட்டது. இரண்டும் வாக்கு வாதம் செய்து கொண்டே நீதிமானைத் தேடிச் சென்றன. இவையிரண்டும் வாக்குவாதம் செய்து கொண்டு போவதைக் கூர்ப்பல்லன் எனும் பூனை மறைந்திருந்து கவனித்தது.

"இவையிரண்டும் வழக்காடி தீர்ப்புக்குப் போகின்றன. இவற்றைக் கபடமாக மோசம் செய்ய வேண்டும்," என்று தீர்மானித்து, அருகில் இருந்த ஒரு குளக்கரையில் அமர்ந்து, கண்களை மூடிக்கொண்டு. சூரியனை நோக்கிப் பிரார்த்தனை செய்வது போல் அபிநயித்து,

"ஆகா! இந்த உலகத்தில் உண்டாகிற இன்பம் கணத்தில் அழிந்து கனவைப் போல் பொய்யாகிறது. அதனால் தர்மத்தைவிட வேறு கதியில்லை. அறத்தை விட்டு எவன் வாழ்கிறானோ, அவன் மரப் பொம்மைக்கு ஒத்தவன். தர்ம வழியில் நடவாதவன் உயிரோடு இருந்தும் பிணத்துக்குச் சமமானவன்.

"எப்படித் தயிரின் சாரம் நெய்யோ, எள்ளின் சாரம் எண்ணெயோ, அப்படியே உயிர் வாழ்ந்திருப்பதன் சாரம் தர்ம நெறியாகும். தர்ம நெறியைத் துறந்து, சோற்றைத் தின்றுகொண்டே காலம் கழிப்பவன் பூமிக்குச் சுமையானவன்.

"ஓ, மக்களே! தர்ம நெறி பலவித இடையூறுகளோடு நன்மையைக் கொடுப்பதால் உண்மையைச் சொல்கிறேன், கேளுங்கள். பிறருக்கு உதவி செய்வது போன்ற புண்ணியமும், பிறரை வருத்துவது போன்ற பாவமும் இல்லை! மேலும், தனக்குத் துன்பம் தருவது பிறருக்குத் தர்மம் ஆகும்; பிறருக்குத் தர்மமாக இருப்பது மற்றொருவனுக்கு அதர்மமாகும். இந்தத் தர்ம இரகசியங்களைக் கேட்டு, உள்ளத்தில் நிருத்தி, நல்வழியில் நடக்க வேண்டும்," என உரக்கப் பேசியது.

அதைக் கேட்ட முயல், "ஆந்தையே, தர்ம சாஸ்திரம் தெரிந்தவன் இதோ குளத்தங்கரையில் இருக்கிறான். இவனிடம் நியாயம் கேட்போம்," என்றது.

உடனே ஆந்தை, "இவன் நமக்கு இயல்பான பகையாளி. தூரத்தில் இருந்தே நம் வழக்கைச் சொல்வோம்," எனக் கூறி, பூனைக்குச் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டே,

"ஓ! தபோநிதியே! நீ அறம் உணர்ந்தவன். ஆகையால்

எங்களிருவருடைய வழக்கைக் கேட்டு அநியாயம் செய்பவனைத் தர்ம நியாயப்படி தண்டிக்க வேண்டும்," என்றது.

அதைக் கேட்ட பூனை காதைப் பொத்திக் கொண்டு, "இப்படிப்பட்ட பேச்சை மறுபடியும் சொல்லாதீர்கள். நரகத்திற்குக் காரணமான கொல்லும் தொழிலை விட்டு, நான் அறத்தை அனுசரித்துக் கொண்டு இருக்கிறேன். மேலும், கொலை செய்கிற புலி முதலானவற்றைக்  கொல்லுகிறவர்களும் நரகத்திற்குப் போகிறார்கள் என்று சாதுக்கள்  சொல்கிறார்கள்.

"பிறரைக் கொல்வதால் நரகம்தான் கிடைக்கும் என்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது. வேதத்தில் உள்ள பொருளை அறியாதவர்கள் யாகத்தில் பசுவைப் பலி கொடுப்பவர்களாவர். யாகத்தில்  கொடுக்கப்படும் பலிக்குப் பதில் ஏழு வருடத்தின் நெல்லைக் கொண்டு வந்து  ஹோமம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பசுக்களைக்  கொன்று, மரங்களை வெட்டி, ஹோமம் செய்து சுவர்க்கம்  கிடைக்கிறதானால், நரகத்திற்கு ஏன் போகிறார்கள்?

"இவை யாவும் வஞ்சகர்களுடைய காரியம் என்று அறிந்திருப்பதால், நல்லவனான நான் உங்களை நிச்சயம் கொன்று தின்ன  மாட்டேன். இது உறுதி. பயந்து எட்ட நிற்க வேண்டாம்.

“எனக்கோ வயதாகிவிட்டது; நான் கிழவன். நான் கிழவனாகையால், எட்ட இருந்து பேசினால், நீங்கள் பேசுவது எனக்குச் சரியாகக் கேட்காது. நான் பேசுவதும் உங்களுக்குச் சரியாய்க் கேட்காது. அதனால் சற்று அருகில் வாருங்கள். உங்கள் வழக்கை என்னிடம் சொல்லுங்கள். அதைக் கேட்டு ஆராய்ந்து இம்மைக்கு நலந்தருவதாகிய நடுவு நிலையில் நின்று நியாயம் கூறுகிறேன்.

"ஆசையினாலாயினும், கோபத்தினாலாயினும் அநியாயத் தீர்ப்பு சொல்கிறவன் தவறாது நரகத்திற்குப் போவான். ஆதலால், நீங்கள் என் காதின் அருகே வந்து உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்," என்று கபடமாகக் கூறியது.

முயலும் ஆந்தையும் பூனையின் பசப்பு வார்த்தைகளால் அதன் மேல் நம்பிக்கை வைத்து, அதன் அருகே சென்றன. நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கப் போகிறது என இரண்டுமே நம்பின. ஆனால், அவ்வஞ்சகப் பூனையோ, இன்று நமக்குச் சரியான விருந்து என மகிழ்ந்து, அவற்றின் மீது பாய்ந்து, அவற்றைப் பிடித்துக் கொன்று சுவைத்துத் தின்றது. பக்தியில் மாண்பு பெற்றவர்கள் போல் வேடமிட்டு, தம் கபடத்தை மறைத்து, இந்தப் பூனையைப் போல் வஞ்சனை செய்யும் மக்களும் இந்த உலகத்தில் பலர் உள்ளனர்.

இவர்களுடைய கபடத்தை உணராமல், இவர்களுடைய புறக் கோலத்தைக் கண்டு, இவர்கள் புனிதமானவர்கள் என நம்பி, இந்த முயலும் ஆந்தையும் கெட்டது போல் கெடுவோரும் பலர் இவ்வுலகில் உள்ளனர்.

இதையே திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

**தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று** -(திருக்குறள்)

(விளக்கம்: வேடன் வலையைப் பரப்பி, அதில் தீனிகளைத் தூவி, புதரில் மறைந்திருக்கிறான். தீனியைத் தின்ன வந்த பறவைகள் வலையில் சிக்கிக் கொண்டதும், புதரிலிருந்து வெளியாகி பறவைகளைப் பிடித்துக் கொள்கிறான். தவக் கோலத்தில் மறைந்து கொண்டு, இனிய வார்த்தைகளைப் பேசி, தம்மை நம்பினோருக்குக் கேடு செய்வோர் இந்த வேடனைப் போன்றவர்கள்தான்.)

இத்தகைய மனிதர்களை நாம் மீண்டும் மீண்டும் காணலாம். இவர்கள் இவ்வுலகிலும் நிந்திக்கப்பட்டு, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் தீய கதிக்குப் போவார்கள். இவர்களுடைய பொய்யான தவக்கோலம் நிந்தனையிலிருந்தும், தீய கதியினிலிருந்தும் இவர்களைக் காப்பதில்லை.

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 7. தவறான போதனை.

காலத்திற்குக் காலம் இவ்வுலகில் சான்றோர் தோன்றி, சத்திய உண்மைகளை உபதேசம் செய்துள்ளார்கள். இவர்கள் தம் தவ வலிமையினால், பேதைமை எனும் இருளிலிருந்து விலகி, பூரண ஞான அறிவைப் பெற்றவர்கள். தம் பூரண ஞான அறிவினால் சத்திய உண்மைகளை உள்ளது உள்ளபடியே காண்பவர்கள். இவர்கள் பாவத்தைப் பாவமாகவும் பாவமின்மையைப் பாவமற்றதாகவும் காண்பார்கள்.

பாவத்தைப் பாவமாகவும், பாவமின்மையைப் பாவமற்றதாகவும் தெளிவாகக் காணும் இவர்கள், சரியான கருத்துகளையும் நலம் தரும் நல்லுபதேசங்களையும் மக்களுக்குப் போதனை செய்துள்ளார்கள்.

இவர்கள் தோன்றுவது மிக அரிது. இவர்களின் தோற்றத்தால் இவ்வுலகம் நன்மை பெறும். இவர்களின் தோற்றத்தால் பலர் நன்மை பெறுவார்கள். இவர்கள் இவ்வுலகின்மீது இரக்கம் கொண்டு, இவ்வுலக மக்களின் நன்மைக்காக இவ்வுலகில் தோன்றுகிறார்கள்.

பேதைமை எனும் இருளிலிருந்து விலகி பூரண ஞான அறிவைப் பெற்ற சான்றோர், தம் பூரண ஞான அறிவினால், சத்திய உண்மைகளை உள்ளது உள்ளபடியே அறிந்து உலகிற்கு உபதேசம் செய்துள்ளதால், இவர்களின் போதனையைக் கடைப்பிடிப்போர் சரியான கொள்கைகளைப் பின்பற்றுவோர் என்றும்; இத்தகையோரின் பக்தியே மெய்யான பக்தி என்றும் பெரியோர் கூறுவர்.

ஏன் இத்தகையோரின் பக்தி மெய்யான பக்தி? அதற்குப் பகவான் புத்தர் இவ்வாறு விளக்கம் கூறியுள்ளார்:

*"உண்மையுள்ள சரியான கருத்துகளை போதனை செய்பவர், மனிதர்களை நல்வழியில் அழைத்துச் செல்கிறார். கெடுதி விளைவிக்கும் தவறான வழியைவிட்டு, நன்மை தரும் நல்வழியில் அழைத்துச் செல்கிறார். இவருடைய சரியான போதனையினால்*

*மனிதர்கள் சுகம் பெறுகிறார்கள்; நன்மை பெறுகிறார்கள்; இன்பம் பெறுகிறார்கள். "*

இவ்வுலகில் தவறான கருத்துகளைப் போதனை செய்வோரும் உண்டு . இவர்களுடைய தவறான போதனைகளை நம்பி, அவற்றைப் பின்பற்றுவோரும் உண்டு. எத்தகையோர் தவறான கருத்துகளைப் போதனை  செய்வர்?

சில பண்டிதர்களும் துறவிகளும், தாங்கள் பெற்ற சில அனுபவங்களை வைத்து, உண்மை எதுவெனக் கற்பனை செய்து பேசுவார்கள். இவர்கள் பூரண ஞான அறிவைப் பெறாதவர்கள். பூரண ஞான அறிவைப் பெறுவதற்கான தவ வலிமை இல்லாதவர்கள். பேதைமை எனும் இருளிலிருந்து முழுமையாக விலகாதவர்கள். வேதங்களைக் கற்றும்,  தவம் இருந்தும் சில அனுபவங்களைப் பெற்றவர்கள்.

பூரண ஞான அறிவைப் பெறாத இவர்கள், சத்திய உண்மைகளை உள்ளது உள்ளபடியே காணாதவர்கள். தாம் பெற்ற சில அனுபவங்களை வைத்து, சத்திய உண்மைகளைக் கற்பனை செய்து பேசுவார்கள். பூரண ஞான அறிவிற்கே விளங்கும் சத்திய உண்மைகளைக் கற்பனையினாலும் சிந்தனையாலும் அறிய முடியாதாகையினால், இவர்களின் பேச்சும் போதனையும் இவர்களுடைய கற்பனையே அன்றி அதில் உண்மை இல்லை.

பூரண ஞான அறிவைப் பெறாத இவர்கள், பொய்யில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டு, மெய்யில் பொய்யைக் காண்பார்கள். பாவமில்லாத இடத்தில் பாவத்தைக் காண்பார்கள்; பாவமுள்ள இடத்தில் பாவமின்மையைக் காண்பார்கள்.

பாவமில்லாத இடத்தில் பாவத்தையும், பாவமுள்ள இடத்தில் பாவமின்மையையும் காணும் இவர்கள், தவறான கருத்துகளைப் போதனை  செய்து, மக்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்வார்கள்.

இவர்கள் பல மாறுபட்ட கருத்துகளைக் கூறுவார்கள். கருத்து

வேற்றுமை காரணமாக ஒருவரை ஒருவர் நிந்தனை செய்வார்கள். "நான் சொல்வதுதான் உண்மை; உன் கூற்றில் உண்மையில்லை; உண்மை இதுதான்; அதுவல்ல உண்மை," எனத் தாம் சொல்வதுதான் உண்மை என்றும், மற்றவர் பேச்சில் உண்மையில்லை என்றும் , ஒருவரை ஒருவர் பழித்தும், இகழ்ந்தும் பேசி சண்டை சச்சரவு செய்வார்கள்.

இவர்களின் போதனையைப் பின்பற்றுவோரும், "எங்கள் குரு சொல்வதுதான் உண்மை; உங்கள் குருவின் பேச்சில் உண்மையில்லை; உண்மை இதுதான்; அதுவல்ல உண்மை," எனச் சண்டை சச்சரவு செய்து, உள்ளத்தில் பகை பாராட்டி, ஒருவருக்கொருவர் கேடு செய்வார்கள்.

பூரண ஞான அறிவைப் பெறாத பண்டிதர்களும் துறவிகளும், பொய்யில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டும், மெய்யில் பொய்யைக் கற்பனை செய்து கொண்டும் பேசுவதால், இவர்களின் போதனையைப் பின்பற்றுவோர், தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் என்றும்; இத்தகையவர்களின் பக்தி பொய்யான பக்தி என்றும் பெரியோர் கூறுவர்.

இத்தகையோரின் பக்தி பொய்யான பக்தி, ஏன்? அதற்குப் பகவான் புத்தர் இவ்வாறு விளக்கம் கூறியுள்ளார்:

*“உண்மைக்குப் புறம்பான, தவறான கருத்துகளைப் போதனை செய்பவரும், அவற்றை உண்மை என நம்பி அவ்வழியில் செல்பவரும் இரு சாராரும் தீய கதியை அடைகின்றனர்.*

*உண்மைக்குப் புறம்பான, தவறான கருத்துகளைப் போதனை செய்பவர், மனிதர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்கிறார். நன்மை தரும் நல்வழியை விட்டு, கெடுதி விளைவிக்கும் தீய வழியில் அழைத்துச் செல்கிறார். இவருடைய தவறான போதனையால் மனிதர்களுக்கு வேதனை, துன்பம், நஷ்டம் ஏற்படுகிறது."*

இதையே திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது:

*குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்*

*குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்*

*குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி*

*குருடும் குருடும் குழிவிழு மாறே!*

●---●---●---●---●---●---●---●---●---●---●

## 7.1 தவறான போதனையை நம்பிக் கெட்ட சுந்தரியின் கதை.

பகவான புத்தர் ஒரு சமயம் சவத்தி என்ற பட்டணத்தில், அனாத பிண்டகர் எனும் செல்வந்தர் கட்டிக் கொடுத்த, ஜெட்ட வன மடத்தில் தங்கி, அப்பட்டணத்தில் வாழும் மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்து வந்தார். அப்பட்டணத்தில் வேறு பல மதக்குருக்களும் இருந்தனர். பகவான் புத்தர் சவத்திப் பட்டணத்திற்கு வந்த பின், அந்த மதக்குருக்களுடைய செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. அவர்களிடம் உபதேசம் கேட்கச் செல்லும் மக்களின் எண்ணிக்கையும் குறைந்து, வருமானமும் குறையத் தொடங்கியது. ஆனால் பகவான் புத்தருக்குப் புகழும், செல்வாக்கும் பெருகியது. பட்டணத்து மக்களில் பெரும்பாலோர், அவரிடம் சென்று உபதேசம் பெற்றார்கள்.

மக்களிடையே தங்களுக்குச் செல்வாக்குக் குறைந்து வருவதையும், பகவான் புத்தருக்குப் புகழ் ஓங்கி வளர்வதையும் கண்ட மற்ற குருக்கள், பொறாமை கொண்டனர். அவர்கள் ஒன்று கூடி, கௌதமத் துறவி பட்டணத்திற்கு வந்த நாள் முதல் தங்களுடைய செல்வாக்கும், வருவாயும் குறைந்துவிட்டது பற்றியும், எவ்வாறு அவற்றை மீண்டும் பெறுவது

என்பது பற்றியும் ஆலோசித்தனர்.

பகவான் புத்தருக்கு இழி பெயர் உண்டானால், மக்கள் மீண்டும் தங்களிடமே உபதேசம் பெற வருவார்கள் என்று முடிவு செய்தனர். எப்படி அவருக்கு இழி பெயரை ஏற்படுத்துவது? தங்களிடம் பக்தி கொண்ட சுந்தரியின் உதவியால், கௌதமத் துறவிக்கு அவப் பெயரை உண்டாக்கலாம் என்று முடிவெடுத்தனர்.

சுந்தரி என்பவள் ஒரு பெண் துறவி. இளமையும் அழகும் உள்ள சுந்தரி, அந்தத் தீய நோக்கங் கொண்ட துறவிகளிடம் பக்தி கொண்டிருந்தாள்.

ஒரு நாள் சுந்தரி அவர்களைக் காண வந்தாள். இவர்களுக்கு வணக்கம் தெரிவித்தாள். ஆனால், அவர்களில் எவரும் அவளிடம் பேசவில்லை. சுந்தரி அவர்களிடம் பல முறை பேசியும், அவர்கள் பதில் பேசாமல் மௌனமாக இருந்தார்கள். இதைக் கண்ட சுந்தரி, " தவறு ஏதேனும் நடந்துவிட்டதா?" என வினவினாள்.

அப்போது அவர்கள், "சகோதரி, கௌதமத் துறவி நமக்குத் தீங்கு செய்வதை நீ காணவில்லையா? மக்களிடையே நமக்குச் செல்வாக்குக் குறைந்து வருவதை நீ அறியவில்லையா? " எனக் கேட்டார்கள்.

"இது சம்பந்தமாக நான் என்ன செய்ய வேண்டும்?"

"சகோதரி, நீ மிகவும் அழகானவள். கௌதமத் துறவிக்கு அவப் பெயரை உண்டாக்கி, மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கைக் கெடு."

அந்தத் தீய நோக்கங் கொண்ட குருக்களோடு நட்பு கொண்டிருந்த சுந்தரி, பகவான் புத்தருக்கு அவப் பெயரை ஏற்படுத்த அவர்களின் வற்புறுத்தலால் சம்மதித்தாள்.

மாலையில், மக்கள் ஜெட்டவன மடத்திலிருந்து திரும்பி

வரும்பொழுது, சுந்தரி கையில் பூவையும் வாசனைத் திரவியங்களையும் எடுத்துக் கொண்டு மடத்தை நோக்கிச் செல்வாள். எங்கே செல்கிறீர்கள்? என்று மற்றவர்கள் கேட்டால், "கௌதமத் திறவியோடு இரவைக் கழிக்கப் போகிறேன்," என்று பதில் கூறுவாள். ஆனால் இவளோ, பகவான் புத்தர் தங்கியிருக்கும் மடத்திற்குப் போவதில்லை. அருகிலுள்ள மற்ற ஏதாவதொரு குருக்களின் மடத்தில் இராப்பொழுதைக் கழிப்பாள்.

காலையில் மக்கள் பகவான் புத்தரைக் காண வரும்பொழுது, இவள் அவ்வழியே ஜெட்டவன மடத்திலிருந்து வருவது போல் பாவனை செய்து, நடந்து வருவாள். அவ்வழியே செல்லும் மக்கள் எங்குச் சென்று வருகிறீர்கள் என்று கேட்டால், " நான் ஜெட்டவன மடத்திலிருந்து வருகிறேன் . கௌதமத் துறவியோடு இரவைக் கழிப்பது என் வழக்கம்," என்று பதில் கூறுவாள்.

தீயோருடன் நட்பு கொண்டிருந்த சுந்தரி, அவர்களின் போதனையின்படி, பகவான் புத்தருக்கு அவப்பெயரை ஏற்படுத்தக் கருதி, இவ்வாறான பொய் வதந்திகளைப் பரப்பி வந்தாள். இவ்வதந்தியையும் சிலர் நம்பினர். மக்களில் சிலருக்குப் பகவான் புத்தரின் மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டது எனத் தெரிந்து கொண்ட அந்தத் தீய நோக்கங் கொண்ட குருக்கள், சுந்தரியைக் கொலை செய்து அப்பழியை பகவான் புத்தரின் மீது சுமத்தத் திட்டமிட்டனர்.

அந்த குருக்கள், சுந்தரிக்குத் தெரியாமல், சில குண்டர்களுக்குப் பணம் கொடுத்து, சுந்தரியைக் கொன்று, அவள் உடலை, ஜெட்டவன மடத்திற்கு அருகில் உள்ள குப்பை மேட்டில் புதைத்துவிட ஏற்பாடு செய்தனர். குண்டர்களும் பணத்தைப் பெற்றுக் கொண்டு, அந்தத் தீய நோக்கங்கொண்ட குருக்களின் கட்டளையை நிறைவேற்றினர்.

தீய எண்ணம் கொண்ட குருக்கள் ஒன்றும் அறியாததுபோல் , சுந்தரியைக் காணவில்லையெனக் கூக்குரல் எழுப்பி, மன்னரிடம் சென்று முறையிட்டனர்.

“நீங்கள் எவரையாவது சந்தேகிக்கிறீர்களா?" என்று மன்னர்

குருக்களிடம் வினவினார்.

"சில நாள்களாகவே, சுந்தரி ஜெட்டவன மடத்தில் இரவைக் கழித்தாள். ஆனால், அவளுக்கு அங்கு என்ன ஏற்பட்டது என்பதை நாங்கள் அறியோம்," என்று குருக்கள் பதிலளித்தார்கள்.

அப்படியாயின், அங்குப் போய்த் தேடிப் பாருங்கள்," என்று மன்னர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

மன்னரின் ஆணைக்குப் பின், தங்கள் ஆதரவாளர்கள் சிலருடன், ஜெட்டவன மடத்திலும், அதன் சுற்று வட்டாரத்திலும், சுந்தரியைத் தேடுவது போல் பாவனை செய்துவிட்டு, அவளுடைய உடலைக் குப்பை மேட்டிலிருந்து எடுத்தார்கள்.

உடலை மன்னரிடம் தூக்கிச் சென்று, "மன்னரே, கௌதமத் துறவியின் சிஷ்யர்கள், தங்கள் குருவின் பாவச் செயல் மக்களுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகச் சுந்தரியைக் கொன்று, உடலைக் குப்பை மேட்டில் போட்டு மறைத்துவிட்டார்கள்," என்று கூறி முறையிட்டார்கள்.

மன்னரும் தீர விசாரிக்காமல், "சுந்தரியின் சடலத்தைப் பட்டணத்து வீதிகளில் தூக்கிச் செல்லுங்கள். மக்களிடம் நடந்ததைச் சொல்லுங்கள்," என ஆணையிட்டார்.

அந்தத் துரோகிகள் மனசாட்சி இல்லாமல், தாங்கள் செய்யும் பாவத்திற்காகக் கொஞ்சம் கூட வருந்தாமல், உடலைப் பாடையில் வைத்துச் சுமந்து கொண்டு, பட்டணத்து வீதிகளில், "கௌதமத் துறவியின் சிஷ்யர்கள் செய்த பாவத்தைப் பாருங்கள். தங்கள் குருவின் பாவத்தை மறைப்பதற்காகச் சுந்தரியைக் கொலை செய்துவிட்டார்கள்," என்று கூக்குரல் எழுப்பி, பகவான் புத்தரைத் தூற்றிப் பேசினார்கள்.

சவத்திப் பட்டணத்தில், பலர் இதை நம்பினார்கள். அதன் பிறகு பகவான் புத்தரின் சிஷ்யர்களைக் காணுமிடமெல்லாம், மக்கள்

தூற்றினார்கள். இச்செயலைப் பற்றிச் சிஷ்யர்கள், பகவான் புத்தரிடம் கூறி முறையிட்டார்கள். அதற்குப் பகவான் புத்தர், “மக்கள் உங்களைத் தூற்றினால், நீங்கள் அவர்களுக்கு இவ்வாறு பதில் கூறுங்கள்:

*“உண்மையில்லாத ஒன்றை உண்மையென்று பனைந்துரைப்பவன் நரகத்தை அடைகிறான். ஒன்றைச் செய்தவிட்டு அதை நான் செய்யவில்லை என் போனும் நரகத்தையே அடைகிறான். மரணத்திற்குப் பின் இருவரும் நிகராகி, நரகம் என்ற ஒரே இடத்தை அடைகின்றனர்."*

சிஷ்யர்களும் தங்களைத் தூற்றுவோரிடம் அவ்வாறே பதில் கூறினர். இதைக் கேள்வியுற்ற மன்னர், தன் ஆட்களிடம், பட்டணத்திற்குப் போய் வேறு யாரேனும் சுந்தரியைக் கொன்றார்களா, என்று விசாரித்தறியங்கள்" என ஆணையிட்டார்.

சாராயக் கடையொன்றில், சுந்தரியைக் கொன்ற குண்டர்கள் குடித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் குடி மயக்கத்தில், மற்றொருவனைப் பார்த்து, நீ அடித்த ஒரே அடியில் சுந்தரி மாண்டுவிட்டாள்," என்று கூறினான். அங்கு மறைந்திருந்த மன்னரின் ஆட்கள், அக்குண்டர்களைப் பிடித்துக் கொண்டு வந்து, மன்னர் முன் நிறுத்தினர்.

மன்னர் அவர்களிடம், "நீங்கள் சுந்தரியைக் கொலை செய்திரகளை?" என்று கேட்டார்.

அதற்கு அவர்களும், "ஆம், மன்னரே!” என்றனர்.

"சுந்தரியைக் கொல்லும்படி உங்களிடம் கூறியது யார்?” என்று மன்னர் வினவினார்.

"சில குருக்கள் மன்னரே!" என்று அந்தக் குண்டர்கள் கூறினார்கள். அதோடு அத்துரோகிகளையும் மன்னருக்கு அடையாளம் காட்டினார்கள்.

மன்னர் அத்தீய குருக்களை அழைத்து அவர்களிடம், “பட்டணத்திற்குள் செல்லுங்கள். மக்களிடம் உண்மையைக் கூறுங்கள். சுந்தரியைக் கொலை செய்ய நாங்கள்தான் ஏற்பாடு செய்தோம். பொறாமையினால், கௌதமத் துறவிக்கு அவப் பெயரை உண்டாக்க எண்ணி, குண்டர்களுக்குப் பணம் கொடுத்து, சுந்தரியைக் கொலை செய்யும்படி கூறினோம். கௌதமத் துறவியும், அவர்தம் சிஷ்யர்களும் குற்றமற்ற நிரபராதிகள். என்று மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்,” என்று மன்னர் ஆணையிட்டார்.

அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அதன்பின் மன்னரும் அவர்களுடைய குற்றச் செயல்களுக்கேற்ற தண்டனையை வழங்கினார்.

ஆகவே, தவறான கருத்துகளைப் போதனை செய்பவரும், அதை நம்பி அவ்வழியில் செல்பவரும், இருவரும் தீய கதியை அடைவார்கள்.

இவர்கள் பொய்யில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டும், மெய்யைப் பொய் என்று விவாதித்தும், பல தவறான கொள்கைகளைப் பின்பற்றுவதால், அறிவுடையோர் இவர்களை அணுகார்.

அறிவில்லாத இவர்கள், தங்களைப் பெரிய அறிவாளிகள் என்று எண்ணிக் கொண்டு, நல்லோர் கூறும் அறிவுரைகளை உதாசீனப்படுத்தி, பின்வருவதை முன்னதாகவே அறியாமல், குற்றங்களைச் செய்து கெடுவார்கள்.

●---●---●---●---●---●---●---●---●---●---●

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்